கழக வெளியீடு : கூ0

திருக்கலைசைச்

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

பேராசிரியர், பெருநாவலர்,

திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்

எழுதிய

அரும்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை - 1.

First Edition : Aug., 1927.
Reprint : June, 1957.

Thirukkalaisaich

Chengazhuneer Vinayagar Pillaiththamizh

Published by,

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office :

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 1200.

பதிப்புரை

பிள்ளைத்தமிழ் பெற்ற கடவுளர்களுள் முருகவேளும் உமையவளுமே முதன்மையானவர்கள். ஆனைமுகக் கடவுளும் பிள்ளையாகப் பிறந்தவர்தாம். ஆயினும் அவர்மீது பிள்ளைத்தமிழ் மிகுதியாகப் பாடப்பெறவில்லை. மூத்த பிள்ளையார் பிள்ளைத்தமிழ் பெறவில்லை என்னும் குறையை நீக்கக் கருதிய மாதவச் சிவஞான முனிவர் திருக்கலைசை என்னும் பதியில் எழுந்தருளிய செங்கழுநீர் விநாயகர் என்னும் மூத்த பிள்ளையார்மீது பருவத்திற்கு ஐவ்வைந்து பாடல்களைக் கொண்டதாய்ப் பிள்ளைத்தமிழ் ஒன்றை இயற்றியருளினார்.

இப் பிள்ளைத்தமிழ் மூலம் மட்டும் 1927-ஆம் ஆண்டில் நம் கழக வாயிலாக வெளியாயிற்று. பிள்ளைத்தமிழ் நூல்களை அரும்பொருள் விளக்கம் முதலியவற்றோடு இப்பொழுது வெளிப்படுத்தும் பணியில் இப் பிள்ளைத் தமிழையுஞ் சேர்த்துப் பேராசிரியர் பெருநாவலர் திரு. பு. சி. புன்னைவனநாதமுதலியார் அவர்களைக்கொண்டு அரும்பொருள் விளக்கம் எழுதச்செய்து வெளிப்படுத்துகிறோம்.

அரும் பொருள் விளக்கம் அருஞ்சொற்கள் எல்லாவற்றிற்கும் எழுதப்பட்டிருத்தலின் மூலப்பொருளை நன்கு விளக்கமாக உணர்ந்து கொள்வதற்கு இவ் வரும்பொருள் விளக்கமே போதுமானதாகும். இதனை எங்கள் விருப்பப்படி எழுதித்தந்த திரு. பு. சி. புன்னைவனநாதமுதலியார் அவர்கட்கும் பொருட்குறிப்பு எழுதியுதவிய இராவ்பகதூர், தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை அவர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகுக. அரும்பொருள் விளக்கத்தோடு கூடிய இப் பிள்ளைத்தமிழ் அனைவராலும் போற்றி வரவேற்கப்படும் என்று நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

தொட்டிக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் என்பது, மறைமுதற்கட் பிரணவத்தின் அரும் பொருளாய்ப் பார் பூத்த அடியார் வினை கெடுத்தருளும் கற்பகமாம் விநாயகக் கடவுள்மீது பாடப்பெற்ற பிரபந்தங் களில் ஒன்று. தொட்டிக் கலைசையில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமான்மீது பாட முன்வந்த திருவாவடுதுறை ஆதீனக் குலதெய்வம் எனப் போற்றப்படும் மாதவச் சிவஞான முனிவர் வரலாறு இந் நூலில் தனியே பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந் நூலாசிரியர் குளத்தூர் அமுதாம்பிகை அம்மை மீதும் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். முனிவரின் அறி வாற்றல், செய்யுட்டிறம், கற்பனை விளக்கும் காட்சி, சித்தாந்தத் தெளிபொருள் தெரிக்கும் திறம் முதலியன அவர்கள் பாடலிலே விளங்குவதைப் பயில்வார் கண்டு களியாதிரார்.

பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஒவ்வொன்றும் பத்துப் பத்துப் பருவங்களுடையன. முதல் ஏழுபருவங் கள் இருவகைப் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாம். ஆண்பாற் பிள்ளைத்தமிழாயின் இறுதி மூன்று பருவங்கள், சிற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவமாக அமை யும். பெண்பாற் பிள்ளைத்தமிழாயின் இறுதி மூன்று பருவங்கள் அம்மானை, நீராடல், ஊசற் பருவங்களாய் விளங்கும். இப் பருவங்களைப் பாடும் காலம் இந் நூலில் அவ்வப் பருவத் தலைப் படியில் குறிக்கப்பட்டுள்ளது.

இவ் விநாயகர் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவம்முதல் சிறுபறைப் பருவம் இறுதியாயுள்ள ஒன்பது பருவங்களி

னும் பருவத்துக்கு ஐந்து பாடல்கள் வீதம் 45 ஆசிரிய விருத்தங்கள் உள. நூல் துவக்கத்தில் விநாயகக் கடவுள், ஆசிரியர் கருத்துப்பற்றிய இரண்டு விருத்தங்களும், 10-வது சிறுதேர்ப் பருவத்தில் ஆறு பாடல்களும் உள. ஆக மொத்தம் 53 பாடல்களிருக்கின்றன.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பிள்ளைத்தமிழ் நூல்களைத் தொகுதி தொகுதியாகக் குறிப்புரைகளுடனும், சிறிது கற்றாரும் படித்து மகிழும் முறையில் இன்றியமையாச் சந்திப்பிரிப்புடனும் அழகுற அச்சிட்டுத் தமிழ்மக்கள் மனமகிழ்ந் தேற்குமுறையில் வெளிப்படுத்த முன்வந்துளார்கள். 1927-இல் இக் கழக மூல வெளியீடாக விளங்கிய இப் பிள்ளைத் தமிழ்க்கு விளக்கமான குறிப்புரை ஒன்றும் எழுதப் பணித்தனர், மேற்படிக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திருவாளர் வ. சுப்பையாபிள்ளை அவர்கள். இவர்கள் பணிக்கிசைந்து என் அறிவுக்கு எட்டிய வண்ணம் குறிப்புரையும் வரைந்துள்ளேன். முனிவர் அவர்கள் உள்ளம் அறிய அவாவு வார்க்குக் குறிப்புரை பயன் தருவதாம்.

இத்தகைய தமிழ்ப் பணியில் ஈடுபட அறிவும் ஆற்றலும் அருளும் முழுமுதற்பொருளை உளம் நிறைந்த அன்புடன் வணங்குகின்றேன்.

புலவரகம், நெல்லை
20—5—1957

பு. சி. புன்னைவனநாதன்.

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் வரலாறு

இந் நூலாசிரியராகிய சிவஞான சுவாமிகள் பாண்டிவள நாட்டில், பொதியின் சாரலில், பாவநாசத்தைச் சார்ந்த விக்கிரம சிங்கபுரத்தில், உயர் சைவவேளாளர் மரபில் ஆனந்தக் கூத்தர் என்பார்க்கும் மயிலம்மையார் என்பார்க்கும் பிறந்தவர். இவருக்கு முக்களாலிங்கர் என்பது பிள்ளைப்பெயர். 'விளையும் பயிர் முளை யிலே தெரியும்' என்பதற்கொப்ப அன்பும் அருளும் வாய்மையுந் தூய்மையுங் கூர்த்த அறிவும் சிறுபிள்ளையிலேயே அமையப் பெற்றவர். ஐந்தாவதாண்டில் இவர் தந்தையார் கல்வி பயிற்று வித்துத் திண்ணைப்பள்ளிக்கு அனுப்பி வந்தனர்.

அங்ஙனம் சென்று வருங்கால் ஒருநாள் வழியில் திருவாவடு துறைத் திருமடத்தினின்றும் போந்த சில முனிவர்களைக் கண்டு நிலத்தில் வீழ்ந்திறைஞ்சி, முகமன் வழங்கித் தமது இல்லமழைத் துத் தம் அன்னையாரைக் கொண்டு திருவமுது ஆக்குவித்து அருத்துவிப்பாராயினர். அதனை யன்போடுசெய்த அன்னையாரை நோக்கி,

> ' அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
> திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
> யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
> மானந் தவாத மயில்'

என்னுஞ் செய்யுளை அன்பு ததும்பப் பாடினர்.

பின்பு தம் தந்தையாரிடம் விடைபெற்று அம்முனிவர் களோடு பல சிவப்பதிகளையுங் கண்டு வணங்கித் திருவாவடு துறையை யடைந்து திருமடப் பேராசிரியராய் விளங்கிய நமச் சிவாய மூர்த்திகளை இறைஞ்சி அன்னார் அருளேக்குற்று, ஒடுக் கத்தின்கண் எழுந்தருளியிருந்த பின்வேலப்ப தேசிகரைக் கண் கள் களிகூரக் கண்டு, அவர்பால் சிவதீக்கையும், சைவசந்நியாச மும், சிவஞான யோகிகள் என்னும் தீக்கைப் பெயரும் பெற்றுச் சைவசித்தாந்த நுண்ணூல்களைக் கற்று வடநூற்கடலும் தென் னூற் கடலும் எல்லை கண்டுணர்ந்தனர்.

ஒருநாள் திருப்பாதிரிப்புலியூரின்கண் 'கரையேறவிட்ட முதல்வா வுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ' என்ற ஈற்றடி வருமாறு ஒரு பாட்டுப்பாடக் குறித்தபடி பாடிப் பொன் முடிப்பு ஒன்று பெற்று அதனைப் பெற விரும்பி வருந்திய பார்ப்பன னொரு வனுக்குக் கொடுத்துதவினர்.

இவர் அருளிச்செய்த நூல்களாவன:

இலக்கணம்

க. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, உ. இலக்கண விளக்கச் சூறாவளி, ந. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்.

இலக்கியம்

க. காஞ்சிப் புராணம், (முதற்காண்டம்) உ. சோமேசர் முதுமொழி வெண்பா, ந. திருவேகம்பரந்தாதி, ச. திருமுல்லை வாயிலந்தாதி, ரு. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, சு. இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி, எ. குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, அ. கச்சியானந்த ருத்ரேசர் பதிகம், கூ. திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, க0. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், கக. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கஉ. செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம், கந. திருத்தொண்டர் திருநாமக் கோவை, கச. நமச்சிவாயமூர்த்தி கண்மாலை முதலியன.

தருக்க முதலியன

க. தருக்க சங்கிரகம் அன்னம் பட்டீயம், உ. சிவஞான போத மகாபாடியம், ந. சிவஞான போதச் சிற்றுரை, ச. சிவஞான சித்தியார் சுபக்கம் உரை, ரு. சித்தாந்தப் பிரகாசிகை, சு. எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம், எ. சிவசமவாதவுரை மறுப்பு, அ. சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பு, கூ. சிவதத்துவ விவேகம், க0. திருவாவடுதுறை மரபட்டவணை மறுப்பின் மறுப்பு, கக. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி.

இவ்வாறு பல நூல்களையுஞ் செய்து 'வான் செய்தவுதவிக்கு வையக மென் செயும்' என்றவாறு மாறில்லாத பேருதவியை இவ்வுலகிற்களித்த ஆதீன குலதெய்வமென ஆன்றோர் போற்றும் ஆசிரியர் விசுவாவசு ஆண்டு, சித்திரைத் திங்கள் ஆயிலிய நன்னாளில் சிவபிரான்றிருவடிநீழலடைந்தனர். இவர் காலம் ஏறக்குறைய நூற்றைம்பதாண்டுகள் எனத்தெரிகின்றது. இவர் மாணாக்கர்களிற் றலைசிறந்து விளங்கியவர்கள் தணிகைப் புராண ஆசிரியராய கச்சியப்ப முனிவரும், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவருமாவர்.

சிறப்புப்பாயிரம்

(இவ்விரண்டு செய்யுட்களும் நூலாசிரியர் காலத்தவை.)

இலகுசக னீரெட்டு நூற்றுநாற் பத்தேழி
னிற்கரங் கும்பமிருபத்
தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதிகை
யேர்க்கவுல வஞ்சுப்பிரம்
கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற்
கலசைப்பதிக் குள்வாழ்செங்
கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க்
கவிபாடி வாஞேருண
அலைமலி கடல்கடைந் தமிழ்நாட்டு மாலென்ன
அவனியிற் புலவர்செவியால்
ஆர்ந்திடத் துறைசைவாழ் சிவஞான தேசிகன்
அரங்கேற்றி ஞனதலால்
நலசுகுண மணிகுவளை யணிபுயன் வீரப்பன்
நல்குமக ராசயோகன்
நங்கள்கே சவபூபன் அநுசர்சேய் சுற்றமும்
நன்மைதரு வாழ்வுறுகவே. (1)

இன்றிழக்கு மூக்கன்றே யீர்ந்துமா னங்கொடுத்தான்
என்றுசய வீரனையே ஏத்துவாள்—மன்றவே
நற்கலைமான் தூயசிவ ஞானமுனி ஓதுதமிழ்ச்
சொற்சுவையை நோக்குந் தொறும். (2)

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர்

பிள்ளைத்தமிழ்

விநாயகக் கடவுள்

மணிபூத்த மருமத்து நெடுமால் முதற்புலவர்
வான்பதம் வேட்ட வர்க்கு
வழங்குவோ னும்தனது பதம்இரந் தோர்க்குதவு
வள்ளலுந் தானே யெனுந்

தணிபூத்த தன்தந்தை போற்பிற குறித்ததூஉந்
தற்குறித் தேன்ற தொழிலுந்
தானே கடைக்கூட்ட வல்லசெங் கழுநீர்த்
தடங்களிறை யஞ்ச லிப்பாம்

அணிபூத்த தொய்யிற் கரும்புசிலை யாகவிழி
அம்பினைப் பூட்டி மடவார்
அம்புயக் கிழவனைச் சீதரனை வென்றவர்கள்
அறிவினைத் திறை கோடலும்

பணிபூத்த மலர்மகளிர் ஆங்கதனை மீட்டிடும்
படிவந் திருந்து செவ்வி
பார்க்குந் திருக்கலைசை மன்னிவாழ் தன்னையே
பாடுமென் கவி தழையவே.

(அரும்பதவுரை.) மணிபூத்த மருமத்து நெடுமால் - கவுத்துவ மணி விளங்குகின்ற மார்பையுடைய பெருமாள். புலவர் -

தேவர். வேட்டவர்க்கு - விரும்பியவர்க்கு. பதம் - பதவி; அடி. இரந்தோர் - வேண்டினோர். தற்குறித்து - தன்னைக் குறித்து. கடைக்கூட்ட - கொண்டு முடிக்க. அஞ்சலிப்பாம் - வணங்குவாம். தொய்யில் கரும்பு சிலையாக - தொய்யிலாக எழுதப்பட்ட கரும்பே வில்லாக. விழி அம்பு - கண்ணாகிய அம்பு. அம்புயக் கிழவன் - நான்முகன். சீதரன் - இலக்குமியின் நாயகன். திறை - கப்பம். பணி - ஏவல்; தொண்டு. செவ்வி - காலம். தழைய - தழைக்க: வியங்கோள் வினைமுற்று. (க)

ஆசிரியர் கருத்து

அகளவடி வானபர மானந்த னேனுமெய்
யடியவர்கள் தம்மை யாள
அருளுரு வெடுத்தலா லதனிளமை நோக்கிமுன்
அந்நலார் கூறு மொழியாத்

தகவுபெறு சிறுதேரை ஈற்றில் தழீஇநலந்
தாங்குகாப் பாதி பத்துந்
தண்டாத வாஞ்சையிற் கலைசைஉற் பலயானை
தன்னையா னின்றேத் தினேன்

இகலுமொரு வேடம் பரித்துவரும் ஒருவனுழை
யெல்லோரு மொல்லைக் குழீஇ
யியல்பாக அவ்வுருவம் உடையவரி னும்பெருமை
யெண்ணிப் பெருஞ்செல் வமும்

மிகவுதவு நீர்மையை மதித்தியல்ப தாத்துதி
விளம்பும்அத் தாதிய ரினும்
வினையினேன் றன்னிடத் தோவாத பேரருள்
விளைத்திடும் எனக் குறித்தே

(அ - ரை.) அகளவடிவு - உருவமில்லாதது; அருவம். அந்நலார் - அழகிற்சிறந்த மாதர். தகவு - தகுதி. காப்பு ஆதி பத்து - காப்புப்பருவம் முதல் பத்துப் பருவங்களும். தண்டாத - நீங்காத. இகலும் - மாறுபடும். பரித்து - தாங்கி. உழை - இடம். நீர்மை - இயல்பு. ஓவாத - நீங்காத, ஓவு: பகுதி. (உ)

க. காப்புப்பருவம்

[இது, பிள்ளைத்தமிழ் பாடும் இடத்து இரண்டாந்திங்களில் பிள்ளையைக் காக்க என்று, திருமால் முதல் முப்பத்து முக்கோடி தேவர் ஈருகப் பல கடவுளரை நூலில் வணங்குதல்.]

திருமால்

கார்கொண்ட கருநிறக் காளத்தை வெண்திரைக்
கைகளின் எடுத்து நீட்டுங்
கடும்பிழையை நோக்காது திருவினெடு சுவையமுது
கதிர்மணீ தனக் குதவிடும்

பேர்கொண்ட நன்றியே பாராட்டி வெண்கேழ்ப்
பெருங்கடற் பள்ளி கொண்டு
பிறங்குநீர்ப் புவிமிசைப் புருடோத் தமப்பெரும்
பெயர்நிறுவும் அண்ணல் காக்க

ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும் ஊருநரும்
இலரென்ப துலகு தேறற்
கெடுத்தவெம் பாசமோ டங்குசந் தன்கரத்
தேந்திமத தாரை சிதறிப்

பார்கொண்ட எண்திசைத் தறுகட் களிற்றுடல்
பனிப்பச் செவிக்கால் எழீஇப்
பகிரண்ட முற்றும் புகுந்துலாய்க் கலைசையிற்
பதியுமோர் களிறு தனையே.

(அ - ரை.) காத்தற் கடவுள் திருமாலாகையால் பிள்ளைத் தமிழ் நூல்கள் பலவற்றினும் முதற்கண் திருமால் வணக்கங் கூறுதல் வழக்கமாக இருக்கிறது. காளத்தை - விடத்தை. கடும் பிழை - கொடுங்குற்றம். கதிர்மணி-கதிரும் மணியும். வெண்கேழ் - வெண்ணிறம். புருடோத்தமன் - திருமால். அண்ணல்-பெருமை உடையவன். தளைப்பவர் - கட்டுபவர். தாரை - ஒழுக்கு. தறுகண்களிற்று உடல் பனிப்ப - அஞ்சாமையையுடைய யானையின் உடம்பு நடுங்க. உலாய் - உலவி. (க)

சிதம்பரேசர்

வேறு

மறம லிந்துல கேழினும் உயிர்க ளஞ்சவு லாவுபு
வதைசெ யும்புர நீறுசெய் புன்சிரிப் பாற்கடி
மலர்து வன்றிய வார்குழல் உமையி ளம்பிடி பூதர
மகளு ளஞ்சுக வாழ்வில் அமிழ்ந்திடத் தேக்கியு
மதுக ரங்குண மாய்வளை சிலைகொ ணர்ந்தமர் ஆடிய
மதனை வென்றருள் சீர்நய னந்தனிற் பாற்குரு
மதியொ டுங்கதிர் வானவன் ஒளியி றந்தமை யாலயர்
மகித லங்களி கூர்தர இன்பினைக் கூட்டியும்

வெறிக மழ்ந்தறு காலுண மதுஉ மிழ்ந்தலர் தாமரை
மிசைவ திந்தவ னேர்முடி விண்டகைப் பூத்தனில்
விரிக ருங்கட லூடெழு கொடிய வெங்கடு வானனி
வெருவும் உம்பர்மு னேயப யந்தனைக் காட்டியும்
விறல்பி றங்குக டாமிசை எதிரும் அந்தக ஞர்தமை
மெலிவு கொண்டுயிர் வீடஉ தைந்தபொற் றுட்டுணை
வினையின் என்தலை மேலருள் செயஇ ரங்கியும் ஏர்மரு
வியசி தம்பர ரூபனை அன்புறப் போற்றுதும்

அறலொ ழுங்குத ஞதிட முழுவ துஞ்செறி நீள்கரை
அகல்வி சும்பென நீடுத ரங்கமிக் கார்த்தெறி
அவிர்செ ழுங்கதிர் மாமணி பரவி யெங்கணு மேவுவ
ததனி லொன்றிய மீனஇ னந்தனக் கேற்றிட
அயல்வ ழிந்திடு மாறுத னகநி ரம்பிய வாலொளி
அணவு தண்புனல் வாவிகு ளிர்ந்திருட் கூட்டம
தழிய மென்கதிர் வீசிய வெளிய அம்புலி போலுற
அருகு வந்துத ணீரைமு கந்தெடுத் தாற்றல்செய்

துறையு மங்கையர் ஆடவ ரதுவ ழங்கிடும் ஆரமு
துணும்அ ரம்பையர் வானவர் தங்களில் தோற்றவிண்
உலகெ னும்புகழ் மீறிய கலைசை யம்பதி யேதன
துறையு ளென்றுநி லாவிவ ணங்கிநிற் போர்க்கருள்

உதவும் எம்பெரு மானேயெவ் வுயிர்க ளுங்கொடு மாமலர்
ஒருவி யன்புரு வாகிஅ டங்கவைத் தாட்கொளும்
உகள பங்கய பாதனே யுலக மெங்கணு மாயெனே
உடைய செங்கழு நீர்மத தந்தியைக் காக்கவே.

(அ - ரை.) மறம் மலிந்து - பாவம் நிறைந்து அல்லது வலிமை நிரம்பி. புரம்நீறுசெய் - திரிபுரத்தைச் சாம்பலாக்கிய. பூதரமகள் - பூமி தேவி. மதுகரம் - வண்டு. நயனம் - கண். அயர் மகிதலம் - தளர்கின்ற பூமி. அறுகால் - வண்டு. விண்ட - விரிந்த. வெருவும் - அஞ்சும். விறல் - பலம், வெற்றி. அந்தகன் - எமன். வீட - அழிய. சிதம்பரரூபனே - அறிவு ஆகாயவடிவனே. தரங்கம் - அலே. அகம் - மனம். அணவு - நெருங்கு. ஆரமுது உணும் - அரிய அமிர்தத்தை உண்ணும். உகளபங்கய பாதம் - தாமரை மலர்போன்ற இரண்டு அடி. தந்தி - யானே. (உ)

சிவகாமியம்மை

வேறு

கரும்பு குழையச் சுரும்பொலிப்பக்
கடிப்போ துகுத்த மதனேஎம்மான்
கண்டு மிகையாம் எனக்கருதிக்
கனலிக் கூட்டு மாற்றலும்பின்

விரும்பு முயிர்கட் கிருங்காம
விளேவும் பிரச மலர்க்கணேயும்
வில்லுந் தரித்த திருக்கரத்தால்
விளேத்த சிவகா மியைப்பணிவாம்

அரும்பும் வெகுளிக் கயஞ்சாடி
யவனி நடுங்க வுடன் மடங்கல்
ஆண்மை யடக்கி யெதிரேறும்
அடல்வெம் புலிப்போத் துயிர்செகுத்து

வரும்போர்ச் சரபத் துளங்குழைய
மார்பும் புயமுந் துவைத்தாடி
மகிழ்கூர் கலேசைச் செங்கழுநீர்
மழமா களிற்றைப் புரக்கவே.

(அ - ரை.) கடிப்போது உகுத்த மதனை - மணம் பொருந்திய மலரம்புகளைச் சொரிந்த மன்மதனை. கனலி - நெருப்பு. பிரசம் - தாமரை. வெகுளிக்கயம் சாடி - கோபம் பொருந்திய யானையைக்கொன்று. மடங்கல் - சிங்கம். அடல் - வலிமை. புலிப்போத்து உயிர் சகுத்து - ஆண்புலியின் உயிரை அழித்து. சரபம் - எண்காற்புள். இச் செய்யுளில் தாருகாவன முனிகள் பிச்சாடண மூர்த்தியாக வந்த சிவபெருமானை அழிக்கும் பொருட்டுச் செய்த தீய வேள்வியில் தோன்றிய யானை, புலி முதலிய மிருகங்களைக் கொன்றனர் என்பது குறிப்பிடப்பட்டது. (௩)

சுப்பிரமணியக்கடவுள்

வேறு

உரவோர்கள் உருவினின் மிகச்சிறிய ரேனுமவ்
வுரனிலாப் பெரியர் தம்மை
உடைந்தழிய வென்றுவிறல் வாகைசூ டுவரெனும்
உரைக்கிலக் கியமா கவே

விரவாது விண்ணம் பொதிந்துயர் அடுக்கலின்
வீறழித் தாண்மை கொண்ட
வெற்றிச் சிறுப்படைச் செய்யவேல் கைவைத்த
வீரனுக் கன்பு செய்வாம்

புரவாக ஐம்பொறியும் வைத்திட் டவற்றுளோர்
பொறியுடைய ஏக தேசம்
பூண்டமற் றவயவங் கட்குமே லாந்தலைமை
பொலிதலாற் பக்தி செய்வோர்க்

கிரவோட்டு தன்குறிப் பெயரையே முழுதிற்கும்
ஏற்பித்த திருமு கத்தின்
எழில்வாய்ந்து தென்கலைசை மேவுசெங் கழுநீர்
இருங்களிற் றைக்காக் கவே.

(அ - ரை.) உரவோர்கள் - அறிவுடையவர்கள். விறல்வாகை சூடுவர் - வெற்றிமாலையை அணிவர். இலக்கியம் ஆக - எடுத்துக் காட்டாக. வீறு - தனிப்பெருமை. வீரன் - முருகன். இரவு - இரக்கின்ற தன்மை. (௪)

வைரவக்கடவுள், பிரமதேவர், தேவேந்திரன், இலக்குமி, கலைமகள், துர்க்கை, சத்தமாதர், முப்பத்துமுக்கோடிதேவர்

வேறு

அலைத்தலை குலைக்கணம் இடித்தெழு செழும்புன
லாலும் பெருக்கமும்
அனக்குழு வளக்கயல் பிடித்துண நினைந்துற
வாடுஞ் செறுக்களும்
அலர்ச்சிசெய் மலர்த்தலை மிதித்துளர் சுரும்பிசை
யாயுந் தருக்களும்
அடற்கரி பரித்திரள் தருக்கியு ரறுங்கலி
யாருந் தெருக்களும்

நிலக்குல மகட்கணி முடிக்கிணை பொருந்திய
தேரின் பிறக்கமும்
நெருக்கிய மறப்பகை முருக்கிய பெரும்புகழ்
மேவந்த நொச்சியும்
நிரப்பினர் பசிப்பிணி யறக்கெட வழங்கற
நீடுந் தொடர்ச்சியும்
நிலைத்தகலை சைப்பதி நகர்க்குளொரு செங்கழு
நீரைங் கரத்தனை

மலர்ப்பத மெடுத்தவ ரியைப்பட வகிர்ந்துரி
மூடும் புயத்தனும்
வரிச்சிறை அளிக்குல முழக்கஇதழ் விண்டுகள்
வார்அம் புயத்தனும்
மதத்துநிழலைத்தனி சுழித்தெதிர் கொடும்பகை
மாய்வெண் கயத்தனும்
மணிக்குவை திரைக்கும்அலை யில்துயின் முகுந்தனை
வாவுங் குயத்தியும்

உலப்பறு கலைத்திற மனைத்துமுத வுஞ்சுதை
யூர்பங் கயத்தியும்
உருத்திடி யெனக்குர லுரப்புமகி டன்திறல்
ஓவுஞ் சயத்தியும்

உருக்கிளர் முருக்கிதழ் உருக்கும்அத ரம்பெறும்
ஏழ்பெண் குலத்தரும்
உருத்திரர் மருத்துவர் வசுக்கதி ரெனும்புல
வோரும் புரக்கவே.

(அ - ரை.) குலைக்கணம் - கரைக்கூட்டம். செறுக்கள் - வயல்கள். தருக்கள் - மரங்கள். முருக்கிய - அழித்த. நிரப்பினர் - வறிஞர். வழங்கு அறம் - கொடுக்கும் தருமம். உரி - தோல். அளிக்குலம் - வண்டுக் கூட்டம். வெண்கயத்தன் - ஐராவதத்தையுடைய இந்திரன். முகுந்தன் - திருமால். அவாவும் குயத்தி - விரும்பும் தனமுடைய இலக்குமி. சுதை ஊர்பங்கயத்தி - வெண்மை நிறம் பொருந்திய தாமரை மலரிலுள்ள கலைமகள். மகிடன் - எருமை வடிவுற்ற அசுரன். ஓவும் - நீக்கும். அதரம் - உதடு. ஏழ்பெண் குலத்தர் - சப்த மாதர்கள். உருத்திரர் - பதினொரு உருத்திரர். மருத்துவர் - அசுவனி தேவர் இருவர். வசு - எட்டு வசுக்கள். கதிர் - சூரியசந்திரர். புலவோர் - தேவர். (ரு)

உ. செங்கீரைப்பருவம்

[செங்கீரைப்பருவம் :—அஃதாவது செங்கீரை ஆடும் பருவம். இப் பருவத்தின்கண் நிகழும் செயல், ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்த்து முகம் அசைய ஆடுதல். இஃது ஐந்தாம் மாதத்தில் நடைபெறும்.]

அண்டர்பணி மூவர்அந சூயைபா லெய்திமழ
வானது நிகர்ப்ப வெய்யோற்
கல்லாது தனதுநல மீயாத தாமரை
அணங்கிடை விரும்பி யேகித்
தண்தவள வெண்முழு மதிக்கடவுள் குழவியாய்த்
தடைபட்டு நின்ற தேய்க்குந்
தனிமுகச் சிறுகோட்டின் அணிகிம் புரிக்கவின்
தன்னைக் குறித்து நோக்கு

மண்டிய விருப்பின தொருப்பாடு தண்டாது
வளர்தலால் விழிகள் சாய்த்து
மாறிமா றித்தெரித் திடுகின்ற தேய்ப்பஒளிர்
மதிமுகம் அசைந்தாடுறத்
திண்டிறல் படைத்தசெங் கழுநீர் மதக்களிறு
செங்கீரை யாடி யருளே
திருந்தும்அடி யார்க்கருள் புரிந்தகலை சைப்பிரான்
செங்கீரை யாடி யருளே.

(அ - ரை.) அண்டர் - தேவர். மூவர் - திரிமூர்த்திகள். மழவு - குழந்தை. வெய்யோன் - சூரியன். நலம் - இன்பம். தவளம் - வெண்ணிறம். ஏய்க்கும் - நிகர்க்கும். தண்டாது - நீங்காது. (கு)

கந்தமலி பங்கயத் திருமுகம் அசைத்தொறாஉங்
கார்க்குஞ்சி மீது கவினக்
கால்யாத்த வெண்மலர்த் தொங்கல்பின் ஞான்றுலாய்க்
கன்னத் தளாவி வாசந்

தந்தமத நீரிற் படிந்துகரு நிறமாய்த்
தணந்துழிப் பற்றும் அந்நீர்
தனைஉதறி முன்னைத் தனதுநிறம் எய்தித்
தரங்கந் துரங்க நிரையிற்

கொந்தலர் உகும்புன்னை மீமிசைத் தாவிக்
குதிக்குமணி ஆழி அகடு
குழியக் குறைத்துக் கறுத்துமழை தூஉய்வெண்மை
கொண்டுவளர் கொண்டல் ஏய்ப்பச்

சிந்துர முகத்தசெங் கழுநீ ரிளங்களிறு
செங்கீரை யாடி யருளே
திருந்தும்அடி யார்க்கருள் புரிந்தகலை சைப்பிரான்
செங்கீரை யாடி யருளே.

(அ - ரை.) கந்தம் - மணம். கார்க்குஞ்சி - கரிய குடுமி. தொங்கல் - மாலை. நான்று - தொங்கி, நால்: பகுதி. கன்னம் - காது. தணந்துழி - பிரிந்த இடத்து. துரங்கம் - குதிரை. சிந்துரம் - யானை. (எ)

வேறு

கொங்கலர் நின்னடி சென்னியில் வைத்துக்
கூப்பிய கையொடுநின்
குளிர்உள மகிழ்தரு தொழில்புரி தாதியர்
கொள்கையின் நிரைநிரையாய்த்

தங்கிய பங்கய மங்கையர் முதலிய
தபனிய உலகுறையுந்
தையலர் மருமத் தொய்யில் பரித்த
தனக்கரி யுலவைகளுள்

திங்களி னொளிர்தன துலவை நிகர்ப்பன
தேர்தர எதிர்நோக்கித்
திரிவது போலிரு புறமு மலர்ந்தவிர்
திருமுகம் இனிதசைய

அங்குசம் ஏந்திய செங்கழு நீர்க்களி
ருடுக செங்கீரை
அணிகிளர் கலைசைந கர்க்கு ளிருந்தவன்
ஆடுக செங்கீரை.

(அ - ரை.) கொங்கு - வாசனை, தேன். தாதியர் - பணிப் பெண்டிர். நிரைநிரை - வரிசை வரிசை. தபனியம் - பொன். தொய்யில் பரித்த - தொய்யில் எழுதப்பட்ட, பரித்தல் - தாங்குதல். உலவை - கொம்பு. அங்குசம் - தோட்டி. (அ)

சுரும்பு முரன் றலர் கொன்றை செறித்த
துலங்கொளி வார்சடிலத்
தோன் றலை யெய்தி அணைத்திடு காலைத்
தோளொடு மருமமெலாம்

இரும்பு ணுறும்படி யுழுதரு த்கைமை
யிரண்டற் குஞ்சமமாய்
இயைவது நோக்கி மகிழ்ந்திவை தம்முள்
இணங்கச் செய்வதென

விரும்பி மயத்து மடப்பிடி கோட்டொடு
வில்உமிழ் தன்உலவை
மேவிட வைத்துக் கொங்கைத் தீம்பயம்
மென்மெல வுண்டுமணம்

அரும்பிய செவ்வாய்ச் செங்கழு நீர்க்களி
ருடுக செங்கீரை
அணிகிளர் கலைசைந கர்க்கு ளிருந்தவன்
ஆடுக செங்கீரை.

(அ - ரை.) முரன்று - ஒலித்து. சடிலம் - சடை. இயைவது - பொருந்துவது. இமயத்து மடப்பிடி - பார்வதி. (கூ)

வேறு

பொங்கொளி வீசு பொலங்குழை காது
புகுந்தேர் கொண்டாடப்
பொன்திகழ் தோளணி தொங்கலி னேடு
புலம்பா நின்ருடத்

துங்க நிலாவு தடங்கையி னீர்சுல
வுங்கார் வென்றுடத்
துன்றிய தேமலி குஞ்சியி னேடு
தொகுந்தார் விண்டாடப்

பங்கயன் ஆதியர் வந்து தவாத
பதந்தா என்றுடப்
பண்பறு நேரலர் நெஞ்சழல் வாயுறு
பஞ்சாய் நைந்தாடச்

செங்கழு நீர்மத தந்திவி நாயக
செங்கோ செங்கீரை
தென்கலை சாபுரி தங்கிய நாயக
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) பொலங்குழை - பொன்னாலாகிய காதணி. துன்றிய - நெருங்கிய. விண்டு - திருமால். தேமலி - தேன் நிறைந்த. நைந்து - வருந்தி. (கO)

௩. தாலப்பருவம்

[தாலப்பருவம் - தாலாட்டைக் கவனிக்கும் பருவம். தாலாட்டு - ஒருவகை நாவசைப்பு. தாலாட்டையேல் தாலாட்டையேல் என்னும் அடுக்கு, தாலோ, தாலேலோ என இணைத்தும் தால் எனத் தனித்தும் மரீஇயிற்று. இஃது ஏழாவது திங்களில் நடைபெறும்.]

புதிய வாசந் தனைப்பரப்பிப்
புறத்தே யெங்கும் திரிந்தயரும்
பொறிவண் டினங்கள் தமையழைத்தம்
புயத்தே னூட்டிப் பகலோம்பி

முதிய நிசிவந் திடும்போது
முகைவிண் டலர்ந்த நறுங்குமுத
மூரிச் செழுந்தேன் முகந்தூட்டி
முழுதுங் காத்துக் கடல்வரைப்பின்

வதியு மிரவோர் தமைக்கீர்த்தி
மகளாந் தூதின் வரக்கூவி
மகிழ்ந்தெப் போதும் எவ்வாறும்
வழங்கிக் காக்கும் பெருங்கொடையோர்

கதிய தடஞ்சூழ் திருக்கலைசைக்
களிறே தாலோ தாலேலோ
கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்
கன்றே தாலோ தாலேலோ.

(அ - ரை.) அம்புயத்தேன் - தாமரைத்தேன். பகல் ஓம்பி - பகலிற் காத்து. முதிய நிசி - முதிர்ந்த நடு இரவு. முகைவிண்டு - மொட்டு விரிந்து. மூரி - வலிமை; பெருமை. வரைப்பு - இடம். வதியும் - தங்கும். கீர்த்தி மகள் - கீர்த்தியாகிய பெண். கதிய - போக்குடைய. தடம் - தடாகம். (௧௧)

தொடுக்குந் தெரியற் கருங்கூந்தல்
தோகை யணையார் துடும்எனநீர்த்
துறையுள் பாய்ந்து விளையாடத்
துண்ணென் றெழுந்து மேற்சென்று

தடுக்கும் பசுங்கோட் டலர்கனிகாய்
சாடித் தனது வயிறுருவத்
தாக்கு நெடுவா ளையும்அதனைத்
தன்னுள் பிணிக்குந் தேனடையும்

அடுக்கும் பரிதி நுழைந்துதினம்
அலைக்கும் பகைமை மீக்கொண்டங்
கடர்த்துப் பறித்த அவன்றிருத்தேர்
அச்சும் அதுகோத் திடும்உருளுங்

கடுக்கும் பொழில்சூழ் திருக்கலைசைக்
களிறே தாலோ தாலேலோ
கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்
கன்றே தாலோ தாலேலோ.

(அ - ரை.) தெரியல் - மாலை. தோகை - மயில், தோகை மயிலுக்குச் சினையாகு பெயர். தும் என - தும்மென்று: ஒலிக் குறிப்பு. பசுங்கோடு - இளங்கொம்பு. சாடி - தாக்கி, மோதி. பிணிக்கும் - கட்டுப்படுத்தும். அடுக்கும் - ஒக்கும். அலைக்கும் - வருத்தும். பரிதி - சூரியன். கடுக்கும் - ஒப்பாகும். (கஉ)

வேறு

வேய்மருள் தோளியர் குஞ்சி திருத்தி
மிலைச்சிய செம்மணியின்
விற்பயில் கொண்டைவெய் யோனென வாங்கி
உடைத்திரு கூறுசெய்தே

தேய்மதி கொண்டபி ரான்சடை மேலெழில்
செய்கென வோர்பிளவைச்
சேர்த்துப் பின்னொரு பிளவுமை யாள்முடி
செருகிச் சமமாகத்

தாய்மதி யென்றிறை மார்பணி கொம்பைத்
தொடையி லறுத்துடனத்
தோகை முடிக்கண் இசைத்து மகிழ்ச்சி
துளும்பித் தந்தையொடுந்

தாய்மகிழ் கூர நடித்தருள் செல்வா
தாலோ தாலேலோ
தகைபெறு செங்கழு நீர்மத வேழம்
தாலோ தாலேலோ.

(அ - ரை.) வேய்மருள் தோளியர் - மூங்கிலை மயங்கச் செய்யும் தோள்களையுடைய பெண்டிர். குஞ்சி - தலைமயிர். மிலைச்சிய - சூட்டிய. மணி - மாணிக்கம். வில் - ஒளி. வெய்யோன் என - சூரியன்போல் செய்கென - செய்க என்று. தூய்மதி - தூய சந்திரன். முடிக்கண் - முடியில். மகிழ்கூர - மகிழ்ச்சிமிக. தகை - அழகு. (கங)

வெண்டலை யேந்திய வேணி முடிப்பரன்
மெய்யினும் வெம்பணிசூழ்
வெற்பன் மடக்கொடி மெய்யினும் ஏறி
மிதித்தா டுந்தோறும்

வண்டலை யக்கடி வீசு கவுட்புறம்
வாக்கும தப்புனலும்
வார்தரு தடவுக் கைத்துளை உமிழும்
மதப்புன லுஞ்சிரமேற்

கொண்டலை நிகரக் கொட்டுவ திருமுது
குரவர் தமக்குமணங்
குலவிய யமுனையு மந்தா கினியுங்
கொடுவந் தாட்டல்பொருந்

தண்டலை சூழ்கலை சைச்சிறு களபந்
தாலோ தாலேலோ
தகைபெறு செங்கழு நீர்மத வேழந்
தாலோ தாலேலோ

(அ - ரை.) வெண்டலை - மண்டையோடு. வேணி - சடை. வெம்பணி - கொடிய பாம்பு. வெற்பன் மடக்கொடி - இமயமலை அரசன் மகளாகிய பார்வதி. வண்டு அலைய - வண்டுகள் சுற்றும் படி. கவுட்புறம் - கன்னத்தில். வாக்கு மதப்புனல் - ஒழுகும் மதநீர். கொண்டலை நிகர - மேகத்தை ஒப்ப. இருமுது குரவர் -

இரண்டு முதிய பெரியவர்களாகிய பெற்றோர்கள். மந்தாகினி - கங்கை. கொடு வந்து ஆட்டல் பொரும் - கொண்டுவந்து நீராட்டு தலையொக்கும். தண்டலை - சோலை. களபம் - யானை. (கச)

வேறு

மலைம டந்தைஅருள் பாலா தாலோ தாலேலோ
மதமி குந்திழிக போலா தாலோ தாலேலோ
அலகி லன்பர்பணி காலா தாலோ தாலேலோ
அருள்சு ரந்திடும்வி சாலா தாலோ தாலேலோ
இலகு கின்றபணி மார்பா தாலோ தாலேலோ
இனிய மந்திரசொ ரூபா தாலோ தாலேலோ
பொலிபெ ருங்கருணை யாளா தாலோ தாலேலோ
புகழ்பெ றுங்கலைசை வாழு தாலோ தாலேலோ.

(அ - ரை.) மலைமடந்தை அருள்பாலா - பார்வதி பெற்ற பாலனே!, பாலன் என்பது, விளி பாலா என்பது. கபோலா - கன்னமுடையவனே!. அலகு இல் - அளவில்லாத. விசாலா - விசாலமானவனே; விசாலம் - பெருமை. இலகு - விளங்கு. பணி - பாம்பு; பணத்தையுடையது; பணம் - படம். மந்திர சொரூபா - பிரணவ வடிவனே!. பொலி - நிறை. கலைசைவாழு - கலைசையில் வாழ்ந்திருக்கின்றவனே!: வாழ்நன் என்பதன் விளி வாழு என்பது. (கரு)

௬. சப்பாணிப்பருவம்

[இஃது இரு கைகளையும் ஒருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம். இஃது ஒன்பதாம் மாதத்தில் நடைபெறும்.]

பக்குவ முதிர்ந்துசிவ புண்ணிய நிரம்பிமல
பாகம் பிறந்து சத்தி
பதிந்துவினை ஒப்புப் பழுத்தவர்கள் பந்தநோய்
பாற்றும்ஒரு செங்கை மலரும்

அக்கருணை யடியவர்க ளுயிருடன் பொருள்காயம்
ஆமெவ் வகைப்பந் தழும்
அங்கீ கரிக்குமோர் கைம்மலரு மாறுபா
டாதரித் திடுசெய் கையான்

மிக்குறும் பகைமைமேன் மேலெய்தி யாங்கது
விலக்கத் தமக்கு யர்ந்தோர்
மேதினிக் கின்மையாற் போராட் டியற்கையின்
மெலியாமல் ஒன்றை ஒன்று

தக்கவகை தாக்குதல் கடுப்பக் கவின்செயவொர்
சப்பாணி கொட்டி யருளே
தங்குகலை சைப்பதிச் செங்குவளை நாயகன்
சப்பாணி கொட்டி யருளே.

(அ - ரை.) பக்குவம் - பாகம். மலபாகம் - மலபரிபாகம். சத்தி - அருள். வினைஒப்புப் பழுத்தவர்கள் - இருவினைப் பயனை அநுபவிக்குந்தோறும் இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதும் அறிவுள்ளவர்கள். பந்தநோய் பாற்றும் - பாசப்பிணியை அறுக்கும். பாறுதல் - பிளத்தல்; அறுத்தல். காயம் - உடம்பு. மாறுபாடு - பகைமை ; வேற்றுமை. எய்தி - பொருந்தி. மேதினி - பூமி. தாக்குதல் கடுப்ப - சாடுதலை ஒப்ப. சப்பாணி - ஒரு கையுடன் மற்றொரு கை சேர்தல். (௧௬)

வயங்குமுழு மதியத் திருஞ்சுவைப் புத்தமுது
வாய்மடுத் துண்ண எண்ணி
வருகின்ற தகுவர்குலம் ஒப்பக் கலித்தலை
மடிக்குந் திரைப்பு னற்பூங்

கயங்கிளர் செழுங்கமல வாள்முகத் தூற்றெழூஉங்
கலுழிக் கடாம டுப்பக்
கருதிவரு மெல்லிசைத் தும்பியும் வண்டுங்
கறங்குமிஞி றுஞ்சு ரும்பும்

பயங்கதுவ மொய்த்தவை விரைந்தோட ஓச்சுறூஉம்
பண்புபொர வேற்போர்க்கு வான்
பரிசிலை யளித்தளித் துச்சிவந் தாங்கொளி
பரப்பிமணி ஆழி பூண்டு

தயங்குமிரு கைகளால் எழில்பூப்ப மதகளிறு
சப்பாணி கொட்டி யருளே
தங்குகலை சைப்பதிச் செங்குவளை நாயகன்
சப்பாணி கொட்டி யருளே.

(அ - ரை.) வயங்கு - விளங்கும். இரும்சுவைப் புத்தமுது - மிக்க உருசியையுடைய புதிய அமுதம். வாய்மடுத்து - உண்டு; வாய்மடு : பகுதி; செவிமடு என்பது கேள் என்பதுபோல. தகுவர் குலம் - அசுரர் கூட்டம். பூங்கயம் - பூக்களையுடைய குளம். கமல வாள்முகத்து - தாமரை மலர்போன்ற ஒளிபொருந்திய முகத்தில். கலுழிக்கடம் - மதப்பெருக்கு. மடுப்ப - பருக. மெல்இசைத் தும்பி - மென்மையான இசையோடு கூடிய வண்டு. தும்பி - வண்டின் வகை. கறங்கும் - ஒலிக்கும். மிஞிறு - வண்டு; இது ஞிமிறு என்று வழங்கப்படும். சுரும்பும் - வண்டும். பயம் கதுவ - பயனைப் பெற்றுக்கொள்ள. ஓச்சுறூஉம் - ஓச்சப்படும். ஓச்சுதல் - ஓட்டுதல். ஏற்போர் - ஏற்றுக்கொள்கின்ற இரவலர். பரிசில் - வெகுமதி; கொடை. மணிஆரம் - மணிமாலை. எழில்பூப்ப - அழகு தோன்ற.

(கஎ)

வேறு

மும்மல மாமத முற்றுப் போத
முழுத்தறி அறவீசி
முகிழ்த்தலர் அன்பின் சங்கிலி யுதறி
முதிர்ந்த வருட்கூடத்

திம்மென நீங்கி வெளிக்கொடு புவன
மெனுங்கடு வனமோடி
யெப்பா கர்க்கு மடங்கல வாகி
யியங்கு முயிர்க்கரிகள்

தம்மைவி டாது தொடர்ந்து பிணிப்பத்
தகுமங் குசபாசந்
தாங்குதல் கண்டுந் தம்போ லெண்ணிச்
சார்பவை தமைநகையாக்

கொம்மைம லர்க்கைகள் கொட்டுவ தேய்ப்பக்
கொட்டுக சப்பாணி
குலைகெழு தடநிறை கலைசை நகர்க்கிறை
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) மும்மலம் ஆம் மதம் - ஆணவம், கன்மம், மாயை என்கிற மூன்று வகைப்படும் மலங்களாகிய மதநீர். போதம் - அறிவு. முழுத்தறி - பெரிய கட்டுமுளை (தூண்). அன்பின் சங்கிலி உதறி - அன்பாகிய தொடரைத் தள்ளி. முகிழ்த்து - அரும்பி. அருட்கூடம் - அருளாகிய இருப்பிடம், கூடம், நிலையம், தங்குமிடம். வெளிக்கொடு - புறப்பட்டு. புவனம் - பூமி. எப் பாகர்க்கும் - எத்தகைய யானைப்பாகர்க்கும். இயங்கும் - இயலும், நடக்கும். உயிர்க்கரிகள் - உயிர்களாகிய யானைகள். பிணிப்ப - கட்ட. அங்குசபாசம் - தோட்டி கயிறு. சார்பவை - சேர் கின்றவை. கொம்மை - இளமை, அழகு. கொம்மை (கும்மி) குலை - கரை.

இச் செய்யுளில் அமைந்திருக்குங் கருத்து, "உள்ளம் எனும் கூடத்தில் ஊக்கம் எனும் தறிநிறுவி உறுதியாகத், தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி இடைப்படுத்தித் தறுகட்பாசக், கள்ளவினைப் பசுபோதக் கவளம்இடக் களித்துண்டு கருணை என்னும், வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்" என்ற பரஞ்சோதி முனிவர் சித்தி விநாயகர் காப்புச் செய்யுளைத் தழுவிய தன்மை அமைந்திருப்பது. (கஅ)

மட்டுமிழ் கொன்றை மிலைச்சுபொ லன்சடை
வள்ள லும் நள்ளிருள்கூர்
வண்டுளர் குழலுமை யாளுங் கைதொடும்
வள்ளத் தறுசுவையுந்

தொட்டு வளாவி அலைந்தவர் மிசைமுடி
தொட்டடி மட்டுமுறத்
தூவி விடுத்தணி வீதி புகுந்து
தொடர்ந்து சிருர்குழுமி

யிட்டு நிறைத்திடு புழுதிக் குவைகளை
எற்றி உழக்கியநீ
இயைந்திடு மப்புழு தித்துகள் போம்படி
எண்ணிக் கைகளினைக்

கொட்டுவ தெனவெழில் கொட்டிட வோர்முறை
கொட்டுக சப்பாணி
குலைகெழு தடநிறை கலைசை நகர்க்கிறை
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) மட்டு - தேன், மணம். நள்இருள் - மிக்க இருள். உளர் - கோது. குழல் - கூந்தல். அலைந்தவர் - பிசைந்தவர். புழுதிக்குவை - தூசிக்கூட்டம். எழில் கொட்டிட - அழகு சொரிய. (கக)

வேறு

விரிதிரை பொங்கி யுலாவும் அளக்கர் மணிப்பாயல்
மிசைவிட முந்தும ராவணை யிற்றுயில் புத்தேளும்
மருமலர் அம்புய மேவுமி ருக்கை மறைக்கோவு
மதமழை சிந்துவெ ளானை யெருத்தனு மற்றேரும்
அருள்தரு கென்றுப ராவி நினைத்தது செப்பாமுன்
அவரவர் சிந்தையின் ஆர்வன முற்றும் அளித்தோகை
கருதிடு செங்கழு நீரிறை கொட்டுக சப்பாணி
கலைசை புரந்தருள் காரண கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) அளக்கர் - கடல். மணிப்பாயல் - அழகிய பள்ளி. அராவணையில் - பாம்பணைப் பள்ளியில். புத்தேள் - திருமால். மறைக்கோ - பிரமன். வெளானை எருத்தன் : இந்திரன். பராவி - துதித்து. சிந்தையின் ஆர்வன - மனத்தில் நிறைந்திருப்பன- காரண - காரணமாயிருப்பவனே. (உ௦)

ரு. முத்தப்பருவம்

[குழந்தையை முத்தம் தருமாறு தாய் தந்தை முதலியோர் வேண்டும் பருவம். இஃது பதினொன்றும் மாதத்தில் நடைபெறும்.

அதிரும் தரங்க முரசறைய
அளிபண் பாடத் துள்ளுவரால்
அனைத்தும் வெடிபோய்த் தாவிமறிந்
தாடிக் குதிக்கச் சங்கினங்கள்

பிதிருந் தரளம் பரிசிலெனப்
பேணிச் சொரியும் புனல்தடஞ்சூழ்
பெருநீர்க் கலைசைச் செங்கழுநீர்ப்
பிள்ளாய் அல்குல் மணிப்பாம்புங்

கதிரும் பசும்பொன் தனக்கோடுங்
காயத் துடையே நீயணியுங்
கலனும் பணிக்குங் கோட்டினுக்குங்
கடுத்து வெருவேம் அணுகவந்து

முதிருஞ் சிவப்பூர் செழுங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
முழுதும் உணர்ந்த பரபோக
முதல்வா முத்தந் தருகவே.

(அ - ரை.) தரங்கம் முரசு அறைய - அலைகள் முரசுபோல் ஒலிக்க. அளி - வண்டு. பண் - இசை. வரால் - வரால் மீன். பிதிரும் தரளம் - ஈனும் முத்தம். புனல்தடம் - நீர்த்தடாகம். அல்குல்மணிப் பாம்பு - அல்குலாகிய அழகிய பாம்பு. தனக் கோடும் - கொங்கையாகிய கொம்பும். கலனும்பணி - ஆபரண மாகிய பாம்பு. கடுத்து வெருவேம் - கோபித்து அஞ்சேம். முதிரும் சிவப்பு ஊர் - முதிர்ந்த சிவப்புப்பொருந்திய. பரபோகம் - முத்தி, இன்பம். (உக)

கொத்து நிரைத்த மலர்ச்சோலைக்
குயில்கூஉங் கலைசைச் செங்கழுநீர்க்
குழகா அம்மை உனைஈன்ற
கோமான் தனக்குப் பணிநிலைக்க

வைத்து நிரைத்த பலஅண்ட
வகுப்பும் வெள்ளிற் கனியெனநீ
மதித்துக் கவளங் கொளக்கரத்தால்
வளையேல் எந்தாய் தளவமலர்

ஒத்து நிரைத்த நகையாடி
உன்னோ டுரிமை பாராட்டும்
ஓகை மடவா ரெனயாமும்
உலவா இன்பக் கடல்மூழ்க

முத்து நிரைத்த கனிவாயான்
முத்தம் தருக முத்தமே
முழுதும் உணர்ந்த பரபோக
முதல்வா முத்தம் தருகவே.

(அ - ரை.) கூஉம் - கூவும்: இன்னிசை அளபெடை. வெள்ளிற்கனி - விளாம்பழம். அண்ட வகுப்பு - அண்டங்களின் ஒழுங்கு. தளவமலர் - முல்லைப்பூ. நகையாடி - சிரித்து. முத்து நிரைத்த - முத்துப்போன்ற பற்களைப் பொருந்திய. (உஉ)

வேறு

துளிதூங்கு தேந்தொடை மிலைச்சிய கருங்கூந்தல்
சுவல்மிசைப் புரள நின்று
தொடித்தோள் பெயர்த்தர மடந்தையர்கள் இருபுறந்
தூமணிக் கவரி வீசத்

தெளிதூங்கு நவமணி குயிற்றிஅணி வாலுளைச்
சிங்கஞ் சுமந்த தவிசில்
செங்கோல் நடாத்தும்இறை வைப்புமுத லெங்கணுஞ்
செல்லப் பரந்து விரியும்

அளிதூங்கும் எமதுளப் பங்கயங் குவியஅது
அல்காமை நிற்கு மளவும்
அவிரொளி பெருதவெம் முகமதியும் ஆலிப்ப
அமிழ்தம் பொழிந்தா லெனக்

களிதூங்கு நகைநிலவு சிறிதே அரும்புநின்
கனிவாயின் முத்தம் அருளே
கலைசைநகர் வந்தசெங் கழுநீர் மதக்களிறு
கனிவாயின் முத்தம் அருளே.

(அ - ரை.) சுவல்மிசை - பிடரியில். துளிதூங்கு தேந்தொடை மிலைச்சிய - தேன் துளிகள் ஒழுகப்பெற்ற மாலையை அணிந்த. தொடித்தோள் பெயர்த்து - தொடியென்னுந் தோளணியை அணிந்த தோளை அசைத்து. கவரி - சாமரம். குயிற்றி - பதித்து. தவிசு - இருக்கை, ஆசனம். அல்காமை - குறையாமை. முகமதியும் - முகமாகிய சந்திரனும். (உரு)

திரைபூத் தொடுங்குவ தெனப்படி அளிக்குலஞ்
சிறைபுடை பெயர்த்தொ டுக்கித்
தீஞ்சுவை மடுத்துண்டு களிதரப் பூங்கவுள்
திறந்தூற் றிருந்து வட்டும்
விரைபூத்த கடமும் கொலைத்தொழில் பழுத்தொழுகும்
வெய்யகூர்ங் கோடும் எங்கள்
மென்மலர் முகத்திற் பெருங்கறையும் ஊறும்
விளைத்திடின் விளைக்க எங்கள்
மரைபூத்த கண்ணிமைக் குள்எழுது மையும்
வயங்குழுக் கணியும் ஐயன்
வதனத் திருங்கறையும் ஊறுஞ்செயாஅன்பு
வாய்ப்பப் பவக் கடற்கோர்
கரைபூத்த செம்மொழிப் பழமறை முளைத்தநின்
கனிவாயின் முத்தம் அருளே
கலைசைநகர் வந்தசெங் கழுநீர் மதக்களிறு
கனிவாயின் முத்தம் அருளே.

(அ - ரை.) திரைபூத்து ஒடுங்குவது என - அலைகள் உண்டாகி ஒடுங்குவதைப்போல. பூங்கவுள் - அழகிய கன்னம். பூ - மலருமாம். உவட்டும் விரை பூத்த கடம்-பெருக்கெடுக்கும் மணம் பொருந்திய மதநீர். பெருங்கறையும் ஊறும் - பெரிய கறுப்பும் கேடும். மரை - தாமரை. வதனம் - முகம். பவக்கடல் - பிறவிக் கடல். (உச)

வேறு

மறைநெறி யொழுகுநர் தங்களை ஆள
மதித்த மறைப்பொருளே
வளிவெளி சலநிலம் அங்கியெ லாம்உரு
வத்து நிறுத்தவனே

நிறைவளை மகளிர் நலம்படர் வோர்தம்
நினைப்பி லொளித்தவனே
நிருமல அறிவினர் சிந்தை நிலாவிய
நிர்க்குண அற்புதனே

அறைகடல் உலகொடு பங்கயன் மாலை
அளித்து வளர்த்தவனே
அவரவர் பெறவுறு பந்தமும் வீடும்
அமைத்த அறக்கடலே

முறைவளர் கலைசைகொள் செங்கழு நீரிறை
முத்தம் அளித்தருளே
முனிவர்கள் அமரர்கள் வந்தடி தாழ்பவ
முத்தம் அளித்தருளே.

(அ - ரை.) மறைநெறி ஒழுகுநர்-வேதியர். வளி வெளி சலம் நிலம் அங்கி - காற்று, ஆகாயம், நீர், மண், நெருப்பு. மகளிர் நலம் படர்வோர் - பெண்களுடைய இன்பத்தைக் கருதி இருக்கின்றவர். நிருமலர் - குற்றமற்றவர். பந்தம் - பாசம், வீடு, முத்தி. தாழ்பவ - வணங்கப்படுகின்றவனே. முறை - நீதி. (உரு)

---

௬. வருகைப்பருவம்

[இது நடக்கும் பருவக் குழந்தையைத் தம்பால் நடந்து வருமாறு தாய் தந்தை முதலியோர் வேண்டுதல். இஃது ஓராண் டில் நடைபெறுவதாம்.]

சுத்தஒளி யாகியறி வாகிமல மாயைத்
தொடக்கிற் படாத நிறைவாய்த்
தொல்லுலகம் எங்கணுங் கரைபுரண் டலையெறி
சுகாதீத வாரியில் எமை

வைத்தருள எம்போ லெடுத்தநின் றிருமேனி
மழமையைக் கண் டினமென
மதித்தளவ ளாவிவிளை யாடக் குறித்தோடி
வருமிள மகார்கள் குழுமி

மொய்த்தவழி நீதவழ்ந் ததிர்வரவு காண்டலும்
முழுக்களிறி தென்ன வெருவி
மொய்யொளிக் கண்களைக் கையாற் புதைத்தலறி
முன்விரைந் தோட முளரிக்

கைத்தலத் தங்குசம் பாசந் தரித்தசெங்
கழுநீர்ப் பிரான் வருகவே
கண்கதுவும் எழில்கொண்டு விண்கதுவு மாளிகைக்
கலைசை நாயகன் வருகவே.

(அ - ரை.) தொடக்கு - சம்பந்தம், கட்டு. சுகஅதீத வாரி யில் - பேரின்பக் கடலில். மழமை - இளமை. இளமகார்கள் - இளஞ்சிறுவர்கள். குழுமி - கூடி, குழுமு: பகுதி. புதைத்து - மூடி. முளரிக்கைத்தலம் - தாமரை மலர்போன்ற கையாகிய இடம். முளரி - முள் + அரி; முள்பொருந்திய தண்டை உடை யது. கதுவும் - பற்றும். (உக)

அலங்கொளி ததும்பிக் கொழுந்துவிடு நித்திலம்
அலைத்துக் கொழிக்கும் அலையால்
ஆற்றல்புரி தன்கரை கரைத்துத் தமக்குறுதி
யாக்குநர்தம் ஊக்க மாய்க்கும்

விலங்கனைய புல்லியர் பொரூஉம்புனற் பூந்தடம்
விலங்கா மலங்கு மீன்போல்
விழையுநின் முன்புறங் காண்டோறு மூற்றிய
விலாழிக் கடாங்கொள் களபக்

குலங்களெதிர் கொண்டோகை கூர்ந்திடப் பின்புறக்
கோமளங் காணுந் தொறுங்
குழமைச் சிறுருங் குழீஇத்தொடர்ந் துன்போற்
குலாவிவர எம்மு ளத்துக்

கலங்கும்அருள் ஈர்ந்திட் டிலங்கும்அருள் காட்டுசெங்
கழுநீர்ப் பிரான் வருகவே
கண்கதுவும் எழில்கொண்டு விண்கதுவு மாளிகைக்
கலைசை நாயகன் வருகவே.

(அ - ரை.) அலங்கு ஒளிததும்பி - அசைகின்ற ஒளி நிரம்பி. நித்திலம் - முத்து. விலங்கு - மிருகம். விழையும் - விரும்பும். விலாழி - நுரை. களபக் குலங்கள் எதிர்கொண்டு ஓகை கூர்ந்திட - யானைக்கன்றின் கூட்டங்கள் எதிரே வந்து உவகை பொருந்த. கோமளம் - அழகு. குழமை - மழமை, இளமை. (உஎ)

மண்டலத் துண்டுடுத் திளநகை மடந்தையர்
வடந்தழுவு கொங்கை தோயும்
மருளன்றி அருளிலாப் பூரியரும் ஆரியரும்
வாக்குமன மெட்டாத நீ

கொண்டநல் திருமேனி உண்மையைத் தத்தங்
குறிப்பினுக் கேற்ப மொழியுங்
கொள்கைபோற் சேயிடையி னின்வரவு கண்டுசிலர்
கூடும் பொதுக் காட்சியால்

வெண்டரள நீள்கோட் டுவாவென் றுளங்கொள்ள
வேறுசிலர் உற்று நோக்கி
வேழமன் றீங்கிது தவழ்ந்துவிளை யாடுநம்
விநாயகன் கோலமென்னக்

கண்டனர் மொழிந்துளத் தள்ளூற வெங்கள்செங்
கழுநீர்ப் பிரான்! வருகவே
கண்கதுவும் எழில்கொண்டு விண்கதுவு மாளிகைக்
கலைசை நாயகன் வருகவே.

(அ - ரை.) இளநகை - புன்சிரிப்பு. மருள் - மயக்கம். பூரியர் - கீழ் மக்கள். ஆரியர் - வடநாட்டார். சேயிடை - தூரத்தில். உவா - யானை. அள்ளூற - இனிமை பொருந்த. (உஅ)

வேறு

இருகை ஊன்றித் தவழ்ந்துமழ
ஏற்றின் வருந்தோ றுங்காங்கே
எறுழ்வன் புழைக்கை நெட்டுயிர்ப்பான்
இருமா நிலத்தைக் குழிப்பதுவும்

பெருகுங் கடைக்காற் செயுஞ்செவிவான்
பிளப்ப தேய்ப்பப் பல்காலும்
பெயர்ந்து மடங்கி யசைந்தாடும்
பீடுந் தத்தம் பொறிதமக்கு

மருவும் புலனை அவற்றிடமா
மண்ணை அகழ்ந்தும் வெளிப்பரப்பை
வளைத்துங் கவவிக் கொடுத்துதவும்
வண்மை காட்ட அசைந்தசைந்து

முருகு விரியுந் தொடைப்புயத்து
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே.

(அ - ரை.) மழ ஏற்றின் - இளங்காளைபோல். எறுழ்வன் புழைக்கை - மிகுந்த வலிமை பொருந்திய தும்பிக்கை. குழிப்பதுவும் - குழி ஆக்குவதும். கடைக்கால் - ஊழிக்காற்று. பீடு - பெருமை. அகழ்ந்தும் - தோண்டியும். முருகு விரியும் - மணம் பரப்பும். (உகூ)

உருகும் அடியார் அள்ளூற
உள்ளே யூறுந் தேன்வருக
உண்ணத் தெவிட்டாச் சிவாநந்த
ஒளியே வருக புலன்வழிபோய்த்

திருகும் உளத்தார் நினைவினுக்குஞ்
சேயாய் வருக எமையாண்ட
செல்வா வருக உமையீன்ற
சிறுவா வருக இணைவிழியாற்

பருகும் அமுதே வருகஉயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருகநறும்
பாகே வருக வரைகிழித்த

முருக வேட்கு முன்உதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே.

(அ - ரை.) திருகும் உளத்தார் - மாறுபட்ட மனம் உடையவர். சேயாய் - தூரத்தில் இருப்பவனே. சேய்மை - தூரம். உயிர்ப் பைங்கூழ் - உயிராகிய பயிர்கள். நறும்பாகே - இனிய பால் போன்றவனே. வரைகிழித்த முருகவேள் - கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகனாகிய செவ்வேள். (௩௦)

எ. அம்புலிப்பருவம்

[வானத்திலுள்ள நிலவைக் குழந்தையுடன் விளையாடுதற்குச் செவிலித்தாயர் முதலியோர் அழைக்கின்ற பருவம். அம்புலி - நிலவு. அழகு பொருந்தியது என்னும் பொருளுடையது. இது பதினெட்டாம் மாதத்தில் நடைபெறும்.]

தண்டரள மேந்தித் தயங்குநீள் கோட்டைத்
தழீஇச்சித் திரம்பெற்ற வான்
தனியுவாத் தரவந்து மல்குநா கத்தார்கள்
தண்டாது சூழ்ந்து மகிழ்வு

கொண்டிட விலங்குதொட் டிக்கலையின் அளியமிழ்து
கொட்டியெமை யாளு முக்கண்
குழகன் படைத்தபெரு வையஞ் சுமந்தாற்று
கொள்கையின் உருக்கொண் டெதிர்

கண்டவர் வியப்புறும் படியருண மணியுருக்
கவினுரும் ஒளிவீ சிடுங்
காட்சியா னின்னையிவ னொத்துளான் நீயுமிக்
கடவுளை நிகர்த்து ளாய்காண்

அண்டரும் பழமறையும் ஓலமிட நின்றவனோ
டம்புலீ ஆட வாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறோ
டம்புலீ ஆட வாவே.

(அ - ரை.) தண்தரளம் - குளிர்ந்த முத்து. சித்திரம் - அழகு, பன்னிறம். நாகத்தார்கள் - தேவர்கள். தண்டாது - நீங்காது. கவினுரும் - அழகு பொருந்திய. அண்டர் - தேவர். (௩க)

ஒளிவந்த நீஉடற் கூறுபடு வெம்பாந்தள்
ஒன்றனுக் கஞ்சி யஞ்சி
உழிதந்து திரிவைஇவ னண்டபகி ரண்டமும்
ஒருங்கஞ்ச வெய் துயிர்க்குந்

துளிவந்த காரிபடு துளைவெள் எயிற்றுவாய்த்
துத்திப் படக்கோள் அராத்
தொகையெலா மெய்யினுங் கையினுங் கலனெனச்
சூழ்ந்துகொண் டான்வெண்மை கூர்ந்

திளிவந்து தேயுங் களங்கஉரு உடையைநீ
இவன்செம்மை வாய்ந்து தேயா
தென்றுமக ளங்கவுரு உடையனு கலினிவனை
எவ்வாறும் ஒப்பாய் அலை

அளிவந்து நின்னையும் அழைத்தனன் காண்விரைந்
தம்புலீ ஆட வாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ ஆட வாவே.

(அ - ரை.) கூறுபடு - பிளவுபட்ட. வெம்பாந்தள் - கொடிய பாம்பு. உழி - இடம். காரிபடு - நஞ்சு பொருந்திய. துளை வெள் எயிறு - துளைபொருந்திய வெள்ளிய பற்கள். துளை: நஞ்சு வெளிப்படுந்துளை. துத்தி - புள்ளி. அராத்தொகை - பாம்பின் கூட்டங்களையெல்லாம். கோள் - வலிமை, தீங்கு. கலன் - அணி களங்கம் - குற்றம், கறை. அகளங்க உருவு - குற்றமற்ற வடிவம்.
(௩௨)

கரும்பினை நெருக்கிநெரி செய்ததன் தேறலைக்
காற்றுநெட் டாலை ஏய்க்குங்
கயமுகன் கையகப் பட்டுநல நீங்குசுரர்
களைகணுய்த் தோன்றி யவனைத்

துரும்புபட வென்றழித் தவ்வமர ரோடுநின்
துயருந் தவிர்த் தளித்த
சூழ்கருணை நீஅறிவை அன்றியும் யாருந்
தொடங்குதொழி லினிது முற்ற

இரும்புவியி லூறுதீர்த் தருள்பவனு மிவனலால்
இல்லையிவ னிசையை யின்னும்
இயம்பிடின் உலப்புறு தீங்குநீ வரினுன்பி
னெய்திடும் பாம்பு மணியும்

அரும்பணிக ளொடுவைத்து மீண்டுதொட ராதுசெயும்
அம்புலீ ஆட வாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ ஆட வாவே.

(அ - ரை.) தேறல் - தெளிவு, கள். கயமுகன் - யானைமுக அசுரன். சுரர் களைகணாய் - தேவர்களுக்கு ஆதாரமானவனாய். இரும்புவியில் - பெரிய பூமியில். ஊறு - கேடு, விக்கினம். இசை - கீர்த்தி, புகழ். அரும்பணிகள் - அரிய பாம்புகளாகிய ஆபரணங் கள். (௩௩)

தெருளாத தக்கனார் வேள்வியை அழித்தும்பர்
சென்னியை உருட்டி நினையுந்
தேய்த்தசய வீரனும் இவன்றம்பி யென்பதுந்
திருமார்பன் அவம திப்ப
உருளாழி கைக்கொண்டு மற்றவன் இரந்தாங்
குளுற்றும்விக டக்கூத் தினுக்
குள்ளம் பெருங்கருணை பூத்தபின் ஆங்கதனை
உதவினா னிவனென் பதும்
வெருளாது சிறிய அரக்கனைப் பந்தாடி
விட்டதுங் கேட்டி லாய்போல்
வேண்டினா மேவலி னழைத்திடவு மதியாது
விண்ணூறு சேறி கண்டாய்
அருளா திவன்கடியில் வேறுபுக லேதுனக்
கம்புலீ ஆட வாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ ஆட வாவே.

(அ - ரை.) தெருளாத - தெளிவுறாத. தக்கனார் - தட்சப் பிரசாபதி. சென்னி - தலை. சயவீரன் - வீரபத்திரன். திருமார் பன் - இலக்குமியை மார்பில் தரித்திருக்கின்றவனாகிய திருமால். ஆழி - சக்கரம். உளுற்றும் - செய்யும். வெருளாது - மயங்காது. ஏவலின் - கட்டளையுடன். விண்ணூறு சேறி - ஆகாய வழி செல்லு கின்றாய்: சேறி - செல் + ற் + இ. கடியில் - நீக்கில். புகல் - புகு மிடம். (௩௪)

வையகம் போற்றும்எம் மானிவனை நீஅவ
மதித்துவெஞ் சாபம் எய்தி
வசையிடைப் பட்டனைமுன் இன்றும்அவ மதிசெய்து
வாராம லொழியின் அங்கண்

எய்தியொரு தண்டமும் புரியவேண் டாதிவண்
இருந்தாங் கிருந்து நீள்கை
எடுத்துவிண் ணுறநிமிர்த் தொருதுருவ ணர்பிணித்
திடுஞ்சூத் திரத்தி னின்றும்

ஒய்யென அறுத்துனைப் பற்றிப் படுப்பனிவன்
உடல்பூண்ட பாம்பி னத்துள்
ஒன்றறியின் அண்ணுந்து தாவியுனை யுண்டுபின்
உமிழாது விடினும் விடுமால்

ஐயமிலை யாகலான் மற்றிவன் வெகுளுமுனம்
அம்புலீ ஆட வாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ ஆட வாவே.

(அ - ரை.) வெஞ்சாபம் - கொடிய சாபம். வசை - பழிப்பு, அவமதிப்பு. தண்டம் - தண்டனை இவண் இருந்தாங்கு இருந்து - இவ்விடத்தில் இருந்த வண்ணமே இருந்து. பற்றிப்படுப்பன் - பிடித்து வருத்துவன். அண்ணுந்து - வாய் திறந்து. வெகுளுமுன் - கோபிக்கும்முன். வெம்சாபம்: விநாயக மூர்த்தியின் பெருவயிறு முதலியவற்றை நோக்கிச் சந்திரன் பரிகசித்துச் சிரிக்க, விநாயகர் கோபித்து 'யாவரும் நிந்திக்க நீ நீசனுக' எனச் சந்திரனைச் சபித்தனர். பின்னர் பிரமதேவர் முதலானோர் வேண்ட, சுக்ல பக்ஷம் நான்காம் நாள் ஒன்றில் மாத்திரம் உலகம் உன்னை நோக்கற்க எனச் சாப விமோசனம் கூறினர். [கந்த புராணம், 6-4-11-14.] (௩௫)

அ. சிற்றிற்பருவம்

[இது சிறுமியர் சிறு வீடு கட்டி விளையாடுகின்ற காலை அதனைச் சிறுவர் தம் காலால் அழித்துக் கெடுத்தலைக் கூறுகின்ற பருவம். இதில் சிறுமியர் 'எம் வீட்டை அழிக்க வேண்டா' என வேண்டுவதாகக் கொண்டு அமைத்துக் கூறுவது. இது மூன்றும் ஆண்டில் நடைபெறும்.]

கூன்பாய் வடிவச் சிலைநுதலும்
குவவுத் தனமும் வாய்த்தமலைக்
குமாரி உளமும் விழியுமகிழ்
கூரக் குறும்பு விளையாடி

வான்பாய் கருணை பூத்திங்கும்
வந்தாய் எந்தாய் சிறுவீடு
வகுக்குந் தொடக்கத் துணைப்போற்ற
மறந்தேம் சிறியேம் அதனால்நீ

தான்பாய் வெகுளி மீக்கொண்டுன்
தன்மை காட்டல் அடாதுனக்கித்
தாழ்வு தீரச் சிறுசோறு
தருவேம் முன்னர் வாவிதொறுந்

தேன்பாய் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) கூன்பாய் வடிவ சிலைநுதல் - வளைவு மிகுந்த வடிவத்தையுடைய வில்போன்ற நெற்றி. குவவு - திரட்சி. மலைக் குமாரி - பார்வதி. கருணை பூத்து - அருள் மலர்ந்து. எந்தாய் - எந்தந்தையே. தொடக்கத்து - துவக்கத்து. போற்ற - வழிபட. வெகுளிமீக்கொண்டு - கோபம் மேற்கொண்டு. அடாது - பொருந்தாது. தாழ்வு - குற்றம், குறைவு. வாவிதொறும் - தடாகங்கள் தோறும். தெள்ளித்தெளிந்தோருக்கு - கசடற அறிந்த அறிவுடையோருக்கு. (௬௬)

விருந்து விளிப்போம் எனக்கருதும்
வேலை அடிகேள் இவண்நீயே
விரும்பி வந்தாயென மகிழ்ச்சி
மீக்கூர் தலினற் செவ்வாயின்
முருந்து தோன்ற முறுவலித்தேம்
அல்லா லொருநின் கரிமுகம்போன்
முகமும் பூதப் பெருவயிறும்
முடங்குங் குறள்தாள் நகுநடையும்
இருந்தவாறு நோக்கிநகைத்
திட்டேம் அல்லேம் இடந்தோறும்
இருக்கு முழக்குந் தேவாரத்
திசையுந் துவன்றி யோங்கவளந்
திருந்துங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) விருந்து விளிப்போம் - விருந்தாக அழைப்போம். வேலை - பொழுது. இவண் - இவ்விடம். மீக்கூர்தலினல் - மேம்படுதலினல். முருந்து - பல். முறுவலித்தேம் - சிரித்தோம். கரிமுகம்போல் முகமும் - யானை முகத்தைப்போல் முகமும். முடங்கும் குறட்டாளும் - வளைந்த குறுகிய அடிகளும். நகைத்திட்டேம் அல்லேம் - சிரித்திட்டேம் அல்லேம். இருக்கு முழக்கும் - இருக்கு வேதமும் முழங்குகின்ற. துவன்றி - நெருங்கி. வளம் திருந்தும் - செல்வம் சிறக்கும். (௫௭)

தவளம் பழுத்த கூனலிளஞ்
சசிநே ருனது கோட்டினெடு
தடந்தாழ் புழைக்கைக் கெதிராகத்
தனத்தோ டுரோமா வலிதாங்கும்
பவளம் பழுத்த சேயிதழார்
பயிலு மனைக ளன்றியொன்றும்
பற்ருச் சிறியேஞ் சிறுவீடுன்
பதத்துக் கிலக்கோ பசுபோதக்

கவளந் தெவிட்டு மதகளிறே
கண்ணின் மணியே நான்மறையுங்
கதறித் திரிந்துங் கண்டறியா
கதியே துறைகள் தொறுந்தரளம்

திவளுங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) தவளம் - வெண்மை. சசி - கற்பூரம்; வெண்மை. உரோமாவலி - மயிர் வரிசை. சேஇதழ் - சிவந்த இதழ். பதத்துக்கு இலக்கோ - அடிக்குக் குறியோ. பசுபோதக் கவளம்-ஆன்ம போதமாகிய உணவை. துறை - நீர்த்துறை. திவளும் - ஒளி வீசும். (௩அ)

நென்னற் பொழுது விருந்தாக
நின்னை விளிப்பேம் கடக்கலுழி
நீத்தஞ் சிற்றில் அழிக்குமெனு
நினைவால் விடுத்தேம் நான்மறையும்

உன்னற் கரிய பரம்பொருளே
உண்மை இதுவாம் அவமதியாய்
உன்னை அழையா திருந்தேமென்
றுள்ளங் கறுவிச் சிறியேமை

இன்னற் படுப்பக் குறும்புபல
இயற்று நின்றாய் நின்பெருமைக்
கேலா தடிகேள் பெருங்கருணைக்
கெல்லாய் எளியேந் தவப்பேறே

தென்னற் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளத் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) நென்னற்பொழுது - நேற்றைப்பொழுது. விளிப்பேம் - அழைக்கின்றவர்களாகிய நாங்கள். கடக்கலுழி நீத்தம் -

மத ஆற்றின் பெருக்கம். நீத்தம் - நீந்தப்படுவது. அம்: செயப்படு பொருள் உணர்த்தும் விகுதி. விடுத்தேம் - விட்டேம்: தன்மைப் பன்மை வினைமுற்று. உன்னற்கு - நினைத்தற்கு. உண்மை - வாய்மை. உள்ளங்கறுவி - மனம் சினந்து. இன்னல் - துன்பம். அடிகேள் - அடிகளே, தேவரீர். ஏலாது - பொருந்தாது. தென்னற்கலைசை - அழகிய சிறந்த கலைசைப்பதி. (௩௧)

பெருத்த வயிறு தயங்கமெல்லப்
பெயர்ந்து நடந்து குடங்கைமிசைப்
பெரும்பண் ணியமும் ஏந்தியெம்பாற்
பேணி வருநின் வரவினைக்கண்

டருத்தி யொடுநீ உண்டபரி
கலசே டத்தை அடியேங்கட்
களிக்க வருவாய் என்றுவகை
அரும்பி வழிபார்த் திருந்தேமை

வருத்தல் அழகோ விக்கினஞ்செய்
மன்ன னெனும்பேர் பேதையரேம்
மாட்டுத் தெரிப்ப தொருபுகழோ
மடவார் ஊடல் மவுணரென்றும்

திருத்துங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) தயங்க - திகைக்க, விளங்க. குடங்கை - உள்ளங்கை. பண்ணியம் - பணிகாரம். அருத்தியோடு - ஆசையோடு. பரிகலசேடம் - உணவின் மிச்சம். உவகை அரும்பி - மகிழ்பூத்து. வருத்தல் - வருத்துதல். பேதையரேம்மாட்டு - அறிவில்லாதவர்களாகிய சிறுமிகளாகிய எங்களிடத்து. மவுணர் - கணவர். (௪0)

௯. சிறுபறைப்பருவம்

[சிறு பறைப்பருவம் என்பது குழந்தை, சிறு பறை கொட்ட தலைக் கூறுகின்ற பருவம். இது மூன்றாம் ஆண்டில் நடைபெறும்.]

குறுகுறு நடந்தெய்தி எம்பிரான் திருமேனி
குழையமேல் ஏறி வேணிக்
கொத்தினைக் கோட்டினிற் கோத்தலைத் துதறிவான்
குளிர்புனல் புழைக்கை எற்றிப்

பொறியரவு தலைமாலை வெள்ளென்பு கைம்மாப்
புலிச்சரும முதலணி யெலாம்
பொள்ளென எடுத்தெடுத் தங்கையன லிற்பெய்து
போக்கியிள மதியை வன்றி

யெறுழுலவை யொன்றப் பொருத்தித் திருக்கைமா
னிடைவைத்து முற்று மதிசெய்
திருவிசும் புய்த்துவான் தருத்தரும் பேரணிகொ
டெங்கணு மலங்க ரித்துச்

சிறுமையிலை இனியென வசைக்குங் கரங்கொண்டு
சிறுபறை முழக்கி யருளே
தென்கோ விருந்தநக ருற்பல விநாயகன்
சிறுபறை முழக்கி யருளே.

(அ - ரை.) குறுகுறு நடந்து - மிகச்சிறிய நடை நடந்து. திருமேனி குழைய - அழகிய உடம்பு நெகிழும்படி. வேணிக் கொத்து - சடைக்கற்றை. கோட்டினில் கோத்து அலைத்து - கொம்பிற்சேர்த்து அசைத்து. வான்குளிர்புனல் - குளிர்ச்சி பொருந்திய ஆகாய கங்கை. வான் - உயர்வும் ஆம். எற்றி - தாக்கி. பொறி அரவு - புள்ளியமைந்த பாம்பு. தலைமாலை - மண்டையோட்டு மாலை. என்பு - எலும்பு. கைம்மா - கையையுடைய மிருகமான யானை. புலிச்சருமம் - புலித்தோல். அணி - ஆபரணம், அணியப்படுவன. அங்கை - அழகிய கை. எறுழ் - வலிமை. ஒன்ற - பொருந்த. விசும்பு உய்த்து - விண்ணிற்செலுத்தி. வான் தரு - விண்ணுலக மரம்; கற்பகம் மந்தாரம் முதலியன. கரம் - கை. தென்கோ - அழகிய தலைவன். (௪௧)

இருக்கோலம் இட்டின்னும் அறியாத நின்தாள்
இறைஞ்சாது தபுமாந் தருக்
கிறுதியிற் கட்கடை நெருப்புகச் சீறிவரும்
இயமன் தருக்கோதையும்

உருக்கோல மேவச் சிரக்கவச மாகமை
யுண்டவிழி வாளி புருவம்
ஒருதனு வெனக்கொண்ட சேனைகள் நிரைத்தமர்
உழக்குமதன் வெற்றி முரசுங்

கருக்கோடி கோடியுற் றுழல்புறச் சமயக்
கருத்தினர் குரைக்கும் ஒலியுங்
காதுரு வண்ணம் அமிழ் தஞ்சொரிவ தேய்ப்பக்
கறங்கஅடி யார்கள் உள்ளத்

திருக்கோயின் மேவிவிளை யாடுமிள மதகளிறு
சிறுபறை முழக்கி யருளே
தென்கோ விருந்தநக ருற்பல விநாயகன்
சிறுபறை முழக்கி யருளே.

(அ - ரை.) இருக்கு - வேதம். ஓலம் இட்டு - முறையிட்டு இறைஞ்சாது - வணங்காமல். தபுமாந்தருக்கு - தப்புகின்ற மனி தருக்கு. இறுதியில் - வாழ்நாள் முடிவில். கண்கடை - கண்ணில். உக - சிந்த. சீறி - கோபித்து. இயமன்தருக்கு ஓதையும் - இயம னைவன் செருக்குடன் செய்கின்ற ஒலியும்; உருக்கோலம் - அழ கிய வடிவம். வச்சிரக் கவசம் - வயிரச்சட்டை. கவசம் - காப்பா வது. மையுண்ட - மை தீட்டப்பட்ட. விழி வாளி - கண் அம்பு. புருவம் ஒரு தனு - புருவம் ஒரு வில். சேனை - படை. அமர் உழக்கும் - போரால் வருத்தும். மதன் - மன்மதன். கரு - பிறப்பு. உழல் - வருந்தித் திரி. குறைக்கும் - இரைக்கின்ற. காது உறு வண்ணம் - செவியிற் படாதபடி. ஏய்ப்ப - போல. உள்ளத்திருக் கோயில் - மனமாகிய அழகிய கோயில். இருக்கு வேதங்கூட இன்னும் அறியாத நினது தாளைப் போற்றாதவர்களாய்த் திரிகிற மனிதர்களைப் பிடிக்கவருகிற இயமன் தருக்கோலி என்பது முதலடிக்குப் பொருள். (சஉ)

வேறு

சழக்குப் படுசில பேய்கள் மடிந்தவர்
சரிகுடர் வலைதாங்கித்
தடவுத் தோற்பல கைத்தொகை யாவும்
தளைதரு தெப்பமெனப்

பழக்கித் திரையெறி குருதிச் செக்கர்ப்
பரவைப் பூம்புனலுள்
படர்ந்து நெடுந்தசை மூளை வழும்புகள்
பற்றி விருந்தயர

உழக்கிக் கடல்படு படைகள் அனைத்தும்
உடைந்து பிதிர்ந்தலற
ஒன்னலர் சென்னி உருட்டிக் கயமுகன்
உரமிரு பிளவுசெய்து

முழக்குற் றிடுவிறல் மாமுர சாள
முழக்குக சிறுபறையே
முற்படு கலைசையில் உற்பல வேழம்!
முழக்குக சிறுபறையே.

(அ - ரை.) சழக்கு - குற்றம். மடிந்தவர் - இறந்தவர். குடர் - குடல். தளைதரு - கட்டப்படுகின்ற. குருதிச்செக்கர்ப் பரவை - இரத்தமாகிய சிவந்த கடல். பரந்திருப்பது - பரவை. படர்ந்து - சென்று. தசை - சதை. வழும்பு - நிணம். விருந்து அயர - விருந்தாகச் சாப்பிட. உழக்கி - கலக்கி. உடைந்து - கெட்டு. அலற - ஓலமிட. ஒன்னலர் சென்னி உருட்டி - பகைவருடைய தலைகளை உருளப் பண்ணி: உருள் என்பதன் பிறவினைப்பகுதி உருட்டு. கயமுகன் உரம் - கயமுகாசுரனுடைய மார்பம். விறல் - வெற்றி. உற்பல வேழம் - உற்பல விநாயகனே. வேழம்: அண்மைவிளி, இயல்பானது. (௩௩)

குடங்கை குவித்திமை யோர்தொழ நின்று
குனிக்குந் தாதையிடம்
குறுகி உரத்தொளிர் பன்றிக் கோடும்
குளிர்சடை யிளமதியும்

உடங்கு பறித்துக் குணிலிற் கைக்கொண்
டுயர்துடி கொட்டியவன்
உரித்தணி யும்பற் கோடு பிடுங்கிமு
னந்தியி யத்தையெழீஇ

வடங்கிளர் கொங்கைத் துர்க்கை மிதித்திவர்
மகிடத் துலவைபறீஇ
மாலவ னின்னிய மோதி யெவர்க்கு
மகிழ்ச்சி தரக்களியான்

முடங்க லுருதெதிர் ஆட்டயர் களிறு !
முழக்குக சிறுபறையே
முற்படு கலைசையில் உற்பல வேழம்
முழக்குக சிறுபறையே.

(அ - ரை.) குடங்கை குவித்து - அங்கை கூப்பி. குணிக்கும் - கூத்தாடும். தாதை - தந்தையாகிய சிவன். உரத்து ஒளிர் - மார்பில் விளங்குகின்ற. பன்றிக்கோடு - பன்றிக்கொம்பு. மதி - பிறை. உடங்கு - உடன். குணில் - குறுந்தடி. உம்பற்கோடு - யானைக்கொம்பு. எழீஇ - எழுப்பி. மகிடத்து உலவை - மகிடாசுரன் தோல். பறீஇ - பறித்து. மால்அவன் - திருமாலானவன். இன்இயம் - இனிய வாத்தியம். முடங்கல் - மடங்குதல். ஆட்டு அயர் - விளையாட்டைச் செய்கின்ற. (சச)

வேறு

மலைவற முப்பொரு ளியல்பு தெளித்தருள்
ஒரு முதலே
மலையென முற்படு வினைகள் அறச்செயும்
எம துயிரே

அலையு மனத்தையு நிலையில் நிறுத்திடும்
அரு ளுருவே
அமிழ்தி னினித்துட லிடனு முகிழ்த்தொளிர்
சிவ விளைவே

உலைவறு கற்பகம் எனவருள் கொட்டிய
மழ களிறே
உலக மனைத்துநின் உடலி லடக்கிய
நிறை பொருளே

கலைசையி னுற்பல இறைவ முழக்குக
சிறு பறையே
கடலொலி பிற்பட இனிது முழக்குக
சிறு பறையே.

(அ - ரை.) மலைவு அற - மயக்கம் நீங்க. முப்பொருள் இயல்பு - இறை உயிர் உலகு என்னும் மூன்று உள்பொருள்களின் தன்மை. தெளித்து அருள் - தெளிவிக்கின்ற. வினைகள் - நல்வினை தீவினைகள். நிலையில் - ஒருமை நிலைமையில். முகிழ்த்து - தோன்றி. உலைவுஅறு - கேடற்ற. உடலில் அடக்கிய - மெய்யில் அடக்கிக்கொண்ட. நிறை பொருளே - எங்கும் நிறைந்து காணப் படும் பொருளே!. கடல் ஒலி - கடல் ஓசை. பிற்பட - பின்னாகும் படி. முழக்குக - கொட்டுக : வியங்கோள் வினைமுற்று. (சரு)

கo. சிறுதேர்ப்பருவம்

[குழந்தை சிறு தேர் உருட்டி விளையாடுதலைத் தெரிவிக்கும் பருவம். இது நான்காம் ஆண்டில் நடைபெறும்.]

செக்கர்க் குரூஉ மணிச் சுடிகைப் பொறிப்படச்
சேடன் சுமந் தாற்றிடுந்
திண்புடவி முழுதுங் கிளைத்தறுத் தப்புறஞ்
சென்றுதன் பகைவாழ் விடம்

ஒக்கப் பெருந்துகள் படுத்திமோட் டாமையோ
டுடையநிண முண்டு பல்லின்
ஒண்குடரி னுதிகவ்வி யீர்த்துரீஇச் சிவபிரான்
உகளபத மன்று தேடப்

புக்குற்ற கேழல்பல் லூழிகள் இடந்தெய்த்த
புலமெலா மொரு கணத்திற்
போந்துகீ ழண்டச் சுவர்த்தலை துளைத்துப்
புறங்கோத்த நீர் சுவற்றித்

திக்கெட்டு முட்டியுல வாகுப் பரிப்பாக
சிறுதேர் உருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி யருளே.

(அ - ரை.) செக்கர்க்குரூஉ மணிச்சுடிகை - சிவந்த நிறம் வாய்ந்த மாணிக்கத்தையுடைய உச்சிக்கொண்டை. பொறிப்படச் சேடன் - புள்ளியுற்ற படங்களையுடைய ஆதிசேடன். திண்புடவி - வலிய பூமி. தன்பகை - தன்னுடைய பகைவன். ஒக்கப்பெரும் துகள்படுத்தி - ஒருசேரப் பெருந்தூசி யுண்டாகச் செய்து. நிணம் - கொழுப்பு. குடரின் நுதி - குடலின் நுனி. ஈர்த்து உரீஇ - பிளந்து உரித்து. உகளபதம் - இரண்டடிகள். கேழல் - பன்றி. பல் ஊழிகள் - பல ஊழிக்காலம். இடந்து எய்த்த - தோண்டி எய்த்துப்போன. புலம் - இடம். கீழ் அண்டம் - கீழ் உலகம். புறம்கோத்த நீர் சுவற்றி வெளியே சேர்ந்துள்ள கடல்நீரை வற்றச் செய்து. திக்கு - திசை. வாகுப் பரிப்பாக - பெருச்சாளியாகிய குதிரையைச் செலுத்துபவனே!. சிற்பரன் - அறிவு மேலானவன்.

நிறந்துளை கொடும்படை திறந்தபுண் வழிதொறு
நெருப்பெனக் குருதி பாய
நெடுங்கிரி யெனப்புரண் டார்த்துக் கடாக்கரியின்
நிரையெலா மெங்கு மின்னுப்

புறந்தர விடித்தெழுங் கார்முகிற் கூட்டம்
பொரக்கிடந் தலற மள்ளர்
பொன்முடி கரங்கால் வழும்புகுடர் சோரிப்
புனல்மேல் மிதப்ப முற்றும்

பறந்தலைப் புக்குநரி கொடிகழுகு வெம்பேய்
பருந்தொடு விருந்து செய்யப்
பகைத்தகுவர் சேனைக் கடற்கிடைத் தோணியிற்
பாயுங் கொடிஞ்சி கிடுகாற்

சிறந்ததிண் டேர்பல வுருட்டும் பகட்டண்ணல்
சிறுதேர் உருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி யருளே.

(அ - ரை.) நிறம் - மார்பு. நெருப்பு என - தீப்போல். குருதி-இரத்தம். நெடுங்கிரி என - பெரிய மலைபோல. வழும்பு - நிணம். சோரிப்புனல்மேல் - இரத்த வெள்ளத்தின்மீது. பறந்தலை - போர்க்களம். கொடி - காகம். விருந்து செய்ய-விருந்தார. தகுவர்-அசுரர். கொடிஞ்சி - தேர் உச்சிப்பகுதி. கிடுகு - தேரின் மரச் சுற்று. பகட்டண்ணல் - யானைமுகனுகிய பெரியோனே! அண்ணல் : அண்மைவிளி. (சஎ)

விண்ணத் தியங்கும் பசும்புரவி யேழ்பூண்ட
வில்லுமிழ் கொடிஞ்சி அந்தேர்
வீற்றிருந் தூருஞ் சுடர்ப்பருதி வானவன்
வியந்துனைக் காணுந் தொறும்

பண்ணப் பணைத்தநந் தேரினும் விசைத்தேகு
பாழிமான் றேரும் இருளைப்
பருகிக் கதிர்க்கற்றை காலுநம் ஒளியின்மேம்
பட்டபே ரொளியும் வாய்ப்பத்

தண்நற் கருங்கடலுடுக்கைத் தலத்துச்
சரிக்குமொரு பரிதிப் பிரான்
தானுகு மென்றுள்ள மருளநின் திருமேனி
தண்பவள வொளிவீசிடத்

திண்ணப் பொலன்சகட் டவிர்மணிக் கூவிரச்
சிறுதேர் உருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி யருளே.

(அ - ரை.) விண்ணத்து - ஆகாயத்தில். இயங்கும் - செல்லும். பசும்புரவி எழ் - எழு பச்சைக் குதிரைகள். வில் - ஒளி. சுடர்ப்பருதி - சுடரையுடைய சூரியன். வியந்து - வியப்படைந்து. பண்ணப்பணைத்த - மிகப்பருத்த. விசைத்து ஓடும் - வேகமுடன் செல்லும். பாழி - பெருமை. கதிர்க்கற்றை காலும் - கிரணக் கூட்டத்தைச் சொரியும். வாய்ப்ப - பொருந்த. தண்நல் - குளிர்ந்த நல்ல. கருங்கடல் உடுக்கைத் தலத்து - கரிய கடலாகிய உடையை அணிந்த பூமியில். சரிக்கும் - இயங்கும். உள்ளம் மருள - மனம் மயங்க. தண்பவள ஒளி - குளிர்ந்த பவளத்தின் சுடர். பொலன் சகடு - பொற்றேர். "பொன்னென்கிளவி ஈறுகெட முன்னர்த் தோன்றும் லகார மகாரம்" கூவிரம் - தேரின் தலையலங்காரம்.

அலைக்கும் அயில் வேல்விழிக் கன்னிமைப் பருவத்
தணங்கினர் முலைக்கு நிகராம்
அம்பொற் பொருப்பினைக் கோட்டினுற் கன்னிமை
யழிந்த பருவத்து மடவார்

முலைக்குநிக ராகச் செயும்பிரம சாரியே
மூதண்ட மூன்றும் அந்த
மூரிப் பொலஞ்சிகரி பேர்த்தெடுத் தங்கையான்
முனியென்ன வாங்கி முற்றுந்

தொலைக்கும் அடல் முப்புரிசை வென்றநாட் சிவபிரான்
துண்ணென் றுகைத்த திண்டேர்த்
தொன்னிலை யழித்தக் கிரிக்குவான் பூதரச்
சொற்பெயரை நிலை பெறுத்துஞ்

சிலைக்குநிக ரொற்றையங் கோட்டுத் தனிக்களிறு
சிறுதேர் உருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி யருளே.

(அ - ரை.) அலைக்கும் அயில் - வருத்தும் கூர்மை. அணங்கினர் - அழகுடைய பெண்கள். அம்பொற் பொருப்பினை - அழகிய பொன் மலையை கன்னிமைப் பருவம் - மணமாகாத இளம் பருவம். உகைத்த - செலுத்திய. சிலை - வில். (௫௬)

பெருங்கருணை சூற்கொண் டிருந்தசிவ காமிப்
பிராட்டியொர் சிதம்ப ரேசப்
பெருமா னெனப்படுங் கீர்த்தியிரு முதுகுரவர்
பேணியுனை யேக காலத்

தொருங்குமார் பத்துற வெடுத்தணைத் தொண்முத்த
முண்டுச்சி மோந்து கொள்ள
வுன்னுதோ றிருவர்களு மொற்றித்த வடிவுகொண்
டுறைபயன் பெற்று மகிழ

வருங்கரட மாமதச் சிந்துரக் களபமே
மதிமுடிச் சடில மோலி
மாசுணப் பேரணியி னைங்கைக் குறுத்தாள்
மதிவகிர்ந் தனைய வொற்றைச்

சிருங்கனே சச்சிதா நந்தபர போகமே
சிறுதேர் உருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி யருளே.

(அ - ரை.) சூற்கொண்டிருந்த - கருப்பமுற்றிருந்த. இரு முது குரவர் : சிவகாமி, சிதம்பரேசுவரர் என்ற பெற்றோர். பேணி - விரும்பி. ஏககாலத்து - ஒரே வேளையில். உன்னுதோறும் - நினைக்கும்பொழுதெல்லாம். ஒற்றித்த வடிவு - அர்த்தநாரீசுவரர் வடிவம். சிந்துரக் களபமே - யானைக்கன்றே!. மாசுணம் - பாம்பு. ஐங்கைக்குறுத்தாள் - ஐந்து கைகளையும் குறுகிய தாள்களையும். சிருங்கனே - கொம்பனே. (௬०)

வண்டின முழக்கமுகை விண்டலர் பசுந்துழாய்
மாலையம் படலை மார்பின்
மாயோன் கிடக்கையை உடுக்கையென் றுண்டமட
மங்கைக்கு மகுட மான

தொண்டைமண் டலம்வாழ மகுடம் பதித்தபொற்
சுடர்மணி நிகர்த்த தொல்சீர்த்
தொட்டிக் கலைப்பதி தழைக்கஅப் பதிமருவு
தூயசிவ பத்தர் வாழக்

கண்டிகையும் வெண்ணீறு மஞ்செழுத் தும்பொலிவு
காட்டவை திக மார்க்கமுங்
கரிசற்ற சைவமும் வளர்ந்தோங்க வாங்குங்
கடற்புவி மகிழ்ச்சி தூங்கத்

திண்டிமந் தாக்குங் குறட்கணஞ் சூழநீ
சிறுதேர் உருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதேர் உருட்டி யருளே.

(அ - ரை.) முகைவிண்டு அலர் - மொட்டு விரிந்து அலர்கின்ற. படலை - மாலை. கிடக்கை - கடல். மடமங்கை - பூதேவி. மகுடம் - கிரீடம் ; முடி. சுடர்மணி நிகர்த்த தொல்சீர்த் தொட்டிக் கலைப்பதி - ஒளிவிடுகின்ற மணியை ஒத்த பழைய சிறப்புடைய தொட்டிக்கலை என்னும் ஊர். கண்டிகை - உருத்திராக்கமாலை. வைதிக மார்க்கம் - வேத நெறி ஒழுகும் சமயம். கரிசு - குற்றம். வாங்கும் - வளைந்த. திண்டிமம் - மத்தளம். குறள் கணம் - சிவ பூதக் கூட்டம். (ருக)

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

முற்றிற்று

பொருட் குறிப்புக்கள்

[எண் : பாட்டின் எண்]

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை